Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk


# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MAY 27, 2022

வெள்ளிக்கிழமை, 27 மே 2022 | ஒளி: 08 கதிர்: 007 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## மஹிந்தவிடம் விசாரணை



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் (CID) வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ தங்கியுள்ள இடத்திற்கு, செவ்வாய்க்கிழமை (25) மாலை சென்றிருந்த குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், அவரிடம் தொடர்ச்சி P2

இடைக்கால பட்ஜெட்டுக்குப் பின்னர்

# மக்களின் கோபம் குறையும்




### வரி சதவிதத்தை அதிகரிக்க நடவடிக்கை

### அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு

### தனியார் ஊழியர்களுக்கு நிவாரணம்

இன்னும் ஆறு வாரங்களில் அரசாங்கம் முன்வைக்கவுள்ள இடைக்கால வரவு- செலவு திட்டத்தில் வரி சதவீதத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைக்குப் பின்னர், சீன கடன் மீள் கட்டமைப்பு குறித்து கலந்துரையாடப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் போராட ஆரம்பித்துள்ளனர். அவர்களின் கோபம் நியாயமானது; அதனை என்னால் உணர முடிகின்றது. தொடர்ச்சி P2



21ஆம் திருத்தம்

# ஏமாற்றுவதாய் அமைந்து விடக்கூடாது

### ஜனாதிபதியின் அதிகாரங்களை முழுமையாக நீக்குங்கள்

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நீதி அமைச்சரிடம் வலியுறுத்து

■ ஆர்.யசி

அரசியலமைப்பின் 21ஆம் திருத்தம் குறித்து நாட்டில் பாரிய எதிர்பார்ப்பு உருவாகியுள்ள நிலையில் இதனையும் ஏமாற்று வேலைத்திட்டமாக முன்னெடுத்துவிடக்கூடாது எனவும், நிறைவேற்ற எதிர்பார்த்துள்ள 21 ஆம் திருத்தத்தினூடாக ஜனாதிபதிக்கான அதிகாரங்களை முழுமையாக நீக்குவதுடன் எக்காரணம் கொண்டும் ஜனாதிபதி அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்ளக் கூடாத விதமாக அமைய வேண்டும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளார். தொடர்ச்சி P2



# 700 மில்லியன் டொலரை சீனா மேலும் வழங்கும்

### கல்முனையில் சீனத் தூதுவர் தெரிவிப்பு

■ (தமிழ்மிரர் கிழக்கு நிருபர்கள்)

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, சீன மக்கள் குடியரசு தொடர்ந்தும் உதவிகளை செய்து வருகின்றது. இவ்வாண்டு இறுதிக்குள் இலங்கை நாட்டுக்கு மேலும் 700 மில்லியன் அமெரிக்க டொலரை சீன அரசாங்கம் வழங்குவதற்கு தயாராக இருக்கிறது என்று இலங்கைக்கான சீன மக்கள் குடியரசின் தூதுவர் கியூ சைன்கோன்ங் தெரிவித்தார். தொடர்ச்சி P2

# 21 குறித்து இன்று பேச்சு

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 21ஆவது திருத்த சட்டமூலம் தொடர்பில் சர்வகட்சிகளின் தலைவர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று விசேட கலந்துரையாடலொன்றை முன்னெடுக்கவுள்ளார்.

நாட்டில் தற்போதைய நெருக்கடி நிலைமைகளை கையாளும் விதமாகவும், நிர்வாக ரீதியிலான மாற்றங்களை செய்யும் விதமாகவும் சகல தரப்பினாலும் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைய, அரசாங்கம் தற்போது உத்தேச 21 ஆம் திருத்தத்தை முன்வைத்துள்ளது. தொடர்ச்சி P2

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு

# IMF ஆதரவளிக்கும்

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தவறான முகாமைத்துவமே காரணமாகும். எனினும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு சர்வதேச நாணய நிதியம் வலுவாக ஆதரவளிக்கும் எனவும், இலங்கைக்கு ஆதரவளிக்கும் வகையில் பொருளாதாரத் தளம் அமைக்கப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தவறான முகாமைத்துவமே காரணமாகும். ஒரு காலத்தில் மிகவும் செழிப்பாக இருந்த நாட்டிற்குள் இப்போது என்ன நடந்துள்ளது என்பதை அவதானிக்கையில் மனம் உடைக்கின்றது. தவறான நிர்வாகத்தின் விளைவாகவே இது நடந்துள்ளது. எனவே நாட்டை ஓர் ஆரோக்கியமான நுண்ணிய பொருளாதார நிலைக்கு மீண்டும் கொண்டுவருவதே தொடர்ச்சி P2

2022 ஒகஸ்ட் முதல் 2023 ஜுலை வரை

# தேவையான மருத்துகள் பெற்றுக்கொடுக்கப்படும்

### இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதி கலாநிதி அலகா சிங்கை தெரிவிப்பு

இந்த ஆண்டு ஜுலை இறுதி வரையானது முக்கியமான காலப்பகுதியாகும். எனினும் இந்த ஆண்டு ஒகஸ்ட் முதல் ஜுலை 2023 வரை நாட்டிற்கு போதுமான மருத்துவப் பொருட்கள் பெற்றுக்கொடுக்கப்படும் என இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதி கலாநிதி அலகா சிங்கை, வெளிவிவகாரத்துறை அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதி கலாநிதி அலகா சிங்கை நேற்று முன்தினம் (25) வெளிவிவகாரத்துறை அமைச்சில் வைத்து சந்தித்து, இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய சவால்கள், குறிப்பாக மருந்துப் பொருட்கள் தொடர்பாக



கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது, நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பல சவால்களை வெளிவிவகாரத்துறை அமைச்சர் சுட்டிக் காட்டியதுடன், இந்தக் கடினமான தருணத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதற்காக உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதியின் அலுவலகம் முன்னெடுத்துள்ள செயலூக்கமான நடவடிக்கைகளுக்காக அவருக்கு நன்றி தெரிவித்தார். தொடர்ச்சி P2

# ஏமாற்றி உள்ளதால் எதிர்பார்க்க முடியாது



வெளிநாட்டு உதவிகள் எமக்கு முழுமையாகக் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் நாம் வங்குரோத்து நிலையில் உள்ளதுடன், பல்வேறு நாடுகளை ஏமாற்றியுள்ளோம். ஜப்பானுக்கு மூன்றரை பில்லியன் ரூபாய், சீனாவுக்கு 7 பில்லியன், இந்தியாவுக்கு 4 பில்லியன் என நிதியை வாங்கி ஏமாற்றியுள்ளோம். ஆகவே, எவரும் அளவுக்கு அதிகமாக உதவப்போவதில்லை என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட வேளையில், பிரதமர் பதவியை பெற்றுக்கொள்ள தகுதியானவர்கள் பலர் கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ச்சி P2




# சமயத்தில் குதிரையோடிய தம்பிக்கு விளக்கமறியல்

■ பாறுக் ஷிஹான், சகா

பரீட்சையின் போது சகோதரனுக்கு பதிலாக ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு, கல்முனை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்து.

நாடளாவிய ரீதியில் க.பொ.த சாதாரண பரீட்சை நடைபெற்று வருகின்ற நிலையில், அம்பாறை, கல்முனை வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தொடர்ச்சி P2

# விடைபெறுகிறார் சவேந்திர; வருகிறார் மேஜர் ஜெனரல் விகும்



தற்போதைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மே மாதம் 31 ஆம் திகதியுடன் இராணுவத் தளபதியின் கடமைகளில் இருந்து விடுகை பெற்றுக்கொள்ளவுள்ளதுடன் ஜூன் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் புதிய பாதுகாப்பு பதவி நிலை பிரதானியாக கடமை பொறுப்பேற்கவுள்ளார்.

இந்நிலையில், புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் விகும் லியனகே கடமைகளை பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜூன் மாதம் 1ஆம் திகதியிலிருந்து புதிய இராணுவத்தளபதியாக கடமைகளை பொறுப்பேற்றுக்கொள்ளவுள்ள மேஜர் ஜெனரல் விகும் லியனகே, இலங்கை இராணுவத்தின் 59ஆவது பிரதம அதிகாரியாக இதுவரை காலம் கடமையாற்றி வந்துள்ளதுடன், தொடர்ச்சி P2



# நிலை தடுமாறும் நாட்டின் எதிர்காலமும் நிலையற்றதாகவே அமையும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

முதலீட்டாளர்களிடம் நம்பிக்கையை நிலை கொள்ளச் செய்தல் மற்றும் அவர்களைப் பாதுகாத்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் அதிகாரிவாதத்திற்கோ அல்லது வேறொருவரின் கைக்கு அடிமையாகும் நிலைமை முதலீட்டாளர்களுக்கு ஏற்படுமாயின் அதன் விளைவை முதலில் நாடே முகம்கொடுக்கும் எனவும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ரூபாயின் பெறுமதி குறைந்துள்ள நிலையில், நாட்டிற்குள் டொலரைக் கொண்டு வருவதற்கான வழிமுறையை நோக்கி நகருவதற்கு நாட்டின் அரசியல் நிலைமை ஸ்திரமானதாக அமைய வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். தொடர்ச்சி P2



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்:

# அரபுக் கல்லூரியின் அதிபருக்குப் பிணை

■ ரஸீன் ரஸ்மின்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த புத்தளம் அல் சுஹைரியா அரபுக் கல்லூரியின் அதிபர் சலீம்கான் முஹம்மது ஷகீல், பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

இடைக்கால பட்ஜெட்டுக்குப் பின்னர்

# மக்களின் கோபம் குறையும்

எனவே, அவர்களின் கோபத்தை குறைக்கும் விதமாக சில மாற்று நடவடிக்கைகளை கையாள வேண்டியுள்ளது என்றார்.

இடைக்கால, வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கவும், தனியார் ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு தற்போது டொலர் தேவைப்படுகின்றது. அதனை பெற்றுக்கொள்ள பல்வேறு தரப்புகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களால் முழுமையாக நிதியுதவிகளை வழங்க முடியாது.

> **பல்வேறு தரப்புகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களால் முழுமையாக நிதியுதவிகளை வழங்க முடியாது. ஆனால், அவர்களின் மூலமாக வேறு நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும்**

ஆனால், அவர்களின் மூலமாக வேறு நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

முதலில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடலை முடித்துக்கொண்டு, சீனாவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளோம். குறிப்பாக கடன் மீள் கட்டமைப்பு குறித்து கலந்துரையாட வேண்டியுள்ளது. சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளிடம் பெற்றுக்கொண்ட கடன் தொகை ஒரே அளவானதாக இருந்தாலும் சீனாவின் வட்டிவீதம் அதிகமாக காணப்படுகின்றது. எனவே இது குறித்து கூடிய கவனம் செலுத்துவோம்.

அரசாங்கம் முன்வைக்கவுள்ள இடைக்கால வரவு செலவு திட்டத்தில், வரி வீதத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அனாவசிய செலவீனங்களை முழுமையாக குறைத்து, அத்தியாவசிய தேவைகளுக்கான நிவாரணங்களை வழங்கவுள்ளோம். அத்துடன் பொருளாதார மீள் திருத்தங்களை செய்து, நெருக்கடிகளை சமாளிக்க முயற்சிப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

21ஆம் திருத்தம்

# ஏமாற்றுவதாய் அமைந்து விடக்கூடாது

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் உட்பட சங்கத்தின் பணியாளர்கள், உத்தேச அரசியலமைப்பின் 21வது திருத்தம் தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுடன் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

அரசாங்கம் முன்வைத்துள்ள உத்தேச அரசியலமைப்பின் 21வது திருத்த யோசனையை தாம் வரவேற்பதாகவும், குறிப்பாக சுயாதீன ஆணைக்குழுக்கள், அரசியலமைப்பு சபை உருவாக்கம் என்பவற்றை வரவேற்பதாகவும் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் சங்கம், இதற்கு மேலதிகமாக மிக முக்கியமான பல்வேறு யோசனைகளை உள்வாங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

19 ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டுவரும் விதமாக இது அமைத்துள்ள போதிலும் நாட்டின் நெருக்கடி நிலைமைகளை கருத்தில் கொண்டு மாற்று நடவடிக்கைகளை கையாள வேண்டும் எனவும், குறிப்பாக இரட்டை பிரஜாவுரிமை நபர்கள் அரசியலில் ஈடுபட முடியாது, நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்பது முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் என்பது சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணிகள் சங்கம், எக்காரணம் கொண்டும் ஜனாதிபதி அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்ள கூடாத விதமாக அமைய வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளனர்.

21ஆம் திருத்தும் குறித்து நாட்டில் பாரிய எதிர்பார்ப்பு உருவாகியுள்ள நிலையில் இதனையும் ஏமாற்று வேலைத்திட்டமாக முன்னெடுத்துவிடக்கூடாது எனவும், இந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி நாட்டிற்கான சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளனர். அத்துடன் அரசியலமைப்பில் அவ்வப்போது திருத்தங்களை செய்து நிலைமைகளை சமாளிக்காது தூரநோக்கு சிந்தனையுடன் இவற்றை கையாள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாட்டை முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ள நீதி அமைச்சர், தானும் இறுக்கமான நிலைப்பாட்டில் இருந்து இந்தத் திருத்தத்தை கொண்டுவந்துள்ளதாகவும், இது குறித்து சகல அரசியல் கட்சிகளுடனும் நாளை (இன்று) விசேட கலந்துரையாடல் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், இதன்போதும் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாட்டை தான் முன்வைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# 700 மில்லியன் டொலரை சீனா மேலும் வழங்கும்

சீன நாட்டின் யுனான் மாநில மக்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிவாரணப் பொதிகளை பயனாளிகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வுகள், இன்னும் பல நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நேற்று (26) இடம்பெற்றன.

கல்முனை மாநகரத்தின் ஆசாத் பிளாஸா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நட்புறவு நாடு என்ற ரீதியில், இலங்கைக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை மீட்பதற்கு தேவையான நிவாரணப் பணிகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

> **நட்புறவு நாடு என்ற ரீதியில், இலங்கைக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை மீட்பதற்கு தேவையான நிவாரணப் பணிகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளோம்**

விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான உபகரணங்களை வழங்கி வைத்துள்ளோம். பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களாகிய உங்களின் வயிற்றுப் பசிகளை நன்கு அறியமுடிகிறது. எதிர்காலத்தில் முடியுமான உதவிகளை இந்த மக்களுக்கு செய்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம். எங்களை அன்பாக வரவேற்று உபசரித்த கல்முனை வாழ் மக்களுக்கு நன்றிகளை தெரிவிக்கின்றோம் என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்திருந்த சீன தூதுவர் தலைமையிலான குழுவினர். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விலும் கலந்துகொண்டனர்.

இந்த இறுக்கமான சூழலில் சீன அரசினால் இலங்கை பூராகவும் வறிய மக்களுக்காக வழங்கப்பட்டு வருகின்ற உலருணவு நிவாரணப் பொதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கென 2,500 பொதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் முக்கிய உற்பத்தித் துறைகளான மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்து துறைசார் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பிலான திட்டங்களையும் சீனத் தூதுவரிடம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் முன்வைத்தார்.

வந்தாறுமூலை, கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்த சீனத்தூதுவர், அங்கு சர்வதேச விவகார அலகினையும் திறந்துவைத்து, கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டார்.

# 21 குறித்து இன்று...

இந்த திருத்தும் குறித்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளின் நிலைப்பாட்டையும் அறிந்துகொள்ளும் விதமாகவும், கட்சிகளின் யோசனைகளை பெற்றுக்கொள்ளும் விதமாகவும் இன்றைய தினம் பிரதமர் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது 21ஆவது திருத்த சட்டமூலம் தொடர்பில் கட்சித் தலைவர்களின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். அவ்வாறு கட்சித் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# சமயத்தில் குதிரையோடிய தம்பிக்கு விளக்கமறியல்

இதில் குறித்த பரீட்சார்த்தி சமய பாட பரீட்சையை சகோதரனுக்குப் பதிலாக எழுதியதுடன், தனது அடையாள அட்டையின் புகைப்படத்தை மாற்றியுள்ளமை விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் ஒரே முகத் தோற்றமுடைய இரண்டு சகோதரர்களும் தத்தமது அடையாள அட்டையில் மாற்றம் செய்து இந்த ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், 32 வயதுடைய தனது சகோதரனுக்கு பதிலாக 28 வயதுடைய தம்பி இவ்வாறு பரீட்சை எழுதி சிக்கியுள்ளார்.

> **32 வயதுடைய தனது சகோதரனுக்கு பதிலாக 28 வயதுடைய தம்பி சமய பாட பரீட்சை எழுதி சிக்கியுள்ளார்**

இதேவேளை, கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட மருதமுனை பகுதியில் உள்ள பிரபல பாடசாலையிலும் ஆள்மாறாட்டம் செய்து பரீட்சை எழுதிய சந்தேகநபரை, பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்து, கல்முனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது இரண்டு நாள்கள் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# IMF ஆதரவளிக்கும்

அவசியமானதாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு சர்வதேச நாணய நிதியம் வலுவாக ஆதரவளிக்கும், இலங்கையின் புதிய பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவான புரிதலை பெற்றவுடன் இலங்கைக்கு உதவத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாகவும், தொழில்நுட்பக் குழுவொன்று இலங்கையில் ஏற்கெனவே செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இலங்கைக்கான இந்தியாவின் ஆதரவை தாம் மதிப்பதாகவும், கடினமான காலங்களில் இந்தியாவின் ஆதரவானது நல்ல நட்பை வெளிக்காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

> **இலங்கையின் புதிய பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவான புரிதலை பெற்றவுடன் இலங்கைக்கு உதவத் தயாராக இருப்பதுடன் தொழில்நுட்பக் குழுவொன்று இலங்கையில் செயற்பட்டு வருகிறது**

# தேவையான மருத்துகள் பெற்றுக்கொடுக்கப்படும்

தற்போதைய சுகாதாரம் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்காக இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் முழுமையான ஆதரவை கலாநிதி. சிங் உறுதிப்படுத்தினார்.

உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து, குறிப்பாக இலங்கையிலுள்ள நாட்டிற்கான அலுவலகம் மற்றும் தற்போதைய சுகாதாரம் சம்பந்தப்பட்ட சவால்களின் நிலையைக் கையாள்வதில் அரசாங்கத்திற்கு உதவுவதற்கு பல வெளிநாடுகளின் ஆதரவைப் பெற்றுள்ள வலுவான, நிலையான மற்றும் தொடர்ச்சியான ஆதரவிற்காக இலங்கை அரசாங்கத்தின் உண்மையான பாராட்டுக்களை அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

# நிலை தடுமாறும் நாட்டின் எதிர்காலமும் நிலையற்றதாகவே அமையும்

இலங்கைக்கு முதலீடாக டொலரை கொண்டு வரும் முதலீட்டாளர்களின் பிரச்சினைகள், ஒரே இடத்தில் மிகத் துரிதமாக தீர்க்கப்படுவதற்கு அவசியமான வழிமுறை மற்றும் ஒரு கட்டமைப்பு சார்ந்த நிறுவனம் அமையப்பெற வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதற்கு இடைத்தரகர்களின் இடையூறு காரணமாக, முதலீட்டாளர்களைக் குழப்பி விடுகின்ற முறைமையே இன்று காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இலங்கை முதலீட்டு சபையின் ஆடைத்தொழிற்சாலை பிரதானிகள் குழுவுடன் நேற்று (26) கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். இதில், கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில் ஆடைத்தொழிற்றுறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதோடு, ஆடைத்தொழிற்றுறைக்கு புத்துயிர் அளிக்கத் தேவையான தலையீடுகள் குறித்தும் இதன் போது விரிவாக கவனம் செலுத்தப்பட்டது. ஆடைதொழிற்றுறை பல தசாப்தங்களாக இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிவரும் வருமான மூலமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏமாற்றி உள்ளதால் எதிர்பார்க்க முடியாது

பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டு இருந்த வேளையில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பொறுப்பேற்றமைக்காக முதலில் அவரை பாராட்ட வேண்டும். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவும் சில தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும். அதற்கு முதலில் சகலரது ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொள்ளும் விதமாக சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, எப்படியும் சர்வதேச நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொண்டு எம்மை இந்த நெருக்கடியில் இருந்து மீட்பார். அதற்கிடையில் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தையும் முன்னெடுப்பார். அத்துடன் கடன் மீள் கட்டமைப்பு விடயங்களை முன்னெடுப்பார் என நம்புகின்றனர். ஆனால் இவை அனைத்துமே பிழைத்தால், அடுத்ததாக என்ன செய்வது என்பது குறித்து சிந்திக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

> **ஜப்பானுக்கு மூன்றரை பில்லியன் ரூபாய், சீனாவுக்கு 7 பில்லியன், இந்தியாவுக்கு 4 பில்லியன் என நிதியை வாங்கி ஏமாற்றியுள்ளோம். ஆகவே, எவரும் அளவுக்கு அதிகமாக உதவப்போவதில்லை**

# மஹிந்தவிடம் விசாரணை

விசாரணை செய்துள்ளதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

‘மைனா கோ கம’ மற்றும் ‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது மே. 09ஆம் திகதி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பிலேயே முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. சுமார் மூன்று மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# விடைபெறுகிறார்...

இராணுவ தொண்டர் படையணியின் கட்டளை தளபதியாக சேவையாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அரபுக் கல்லூரியின் அதிபருக்குப் பிணை

புத்தளம் மேல் நீதிமன்றத்தில் இதுதொடர்பான வழக்கு நேற்று முன்தினம் (25) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவர், பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு உதவி ஒத்தாசை புரிந்ததாக சுஹைரியா மத்ரஸா பாடசாலை அதிபர் சலீம் கான் மொஹம்மட் ஷகீல் மீது பயங்கரவாத தடைச் சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் குற்றம் சுமத்தப்பட்டு, 2021 செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அவர், அன்றிலிருந்து பிணை கிடைக்கும் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நெருக்கடி நீடித்தால் பலரும் வேலை இழப்பர்



தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் பலர் வேலை இழக்கும் அபாயம் உள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ வேண்டிய நிலை ஏற்படும் என்றும், ஒரு வாரத்திற்குப் போதுமான பொருட்களை வாங்குவதற்குக் கூட வருமானம் இல்லை என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (26) இடம்பெற்ற சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் பொருளாதாரம் எப்போது மீண்டு வரும் என்று கூற முடியாது. நாட்டில் தற்போது உள்ள வெளிநாட்டு கையிருப்பு ஒரு வாரத்திற்கு போதுமானதாக இல்லை. இதன் காரணமாக அத்தியாவசிய பொருட்கள் மாத்திரமே இறக்குமதி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



## அமைச்சர் காஞ்சன– அமெரிக்க தூதுவர் ஜூலி சந்திப்பு

எரிசக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போது, எரிசக்தி துறையில் இலங்கை முன்னெடுக்கவுள்ள மாற்றுவழித் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதோடு, தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது ட்வீட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## ஐஸ்ஸுடன் மூவர் கைது

பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் ரக போதைப்பொருளுடன் நீர்கொழும்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பில் நேற்று முன்தினம் (25) காலையில் கைதுசெய்யப்பட்டவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மற்றுமொரு சந்தேகநபர் நீர்கொழும்பு பஸ் தரிப்பிட பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவ்விரு சந்தேகநபர்களிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மேலும் ஒருவரை நீர்கொழும்பு - ரமணி மாவத்தையில் வைத்து நேற்றிரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதானவர்கள் நீர்கொழும்பு மற்றும் மருதானைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## பேரினவாத ஆட்சியாளர்களே பயங்கரவாதிகள்

### அருட்தந்தை ம.சக்திவேல்



பயங்கரவாத தடைச் சட்டத்தை உருவாக்கி, கடந்த 43 ஆண்டு காலமாக பாதுகாத்துவரும் பேரினவாத ஆட்சியாளர்களே பயங்கரவாதிகள்; ஜனநாயக கொலையாளிகள். ஏனெனில், தமிழர்களின் ஜனநாயக ரீதியிலான அரசியல் போராட்டத்தை அழிக்கவே இச் சட்டத்தை கொண்டுவந்தனர் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை ம.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட சுந்தரலிங்கம் கேதீஸ்வரன், 13 ஆண்டுகளுக்கு பின்னர் நேற்று முன்தினம்( 25.05.2022) விடுதலை செய்யப்பட்டுள்ளார். சித்திரவதையை தொடர்ந்து புரியாத மொழியில் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலமே 21 வயதே நிரம்பிய கேதீஸ்வரனின் 13 வருடங்களை சிறையில் கழிக்க வைத்துள்ளது. இதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்களுக்கு எதிரானது என்பதற்கும் இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் எத்தகைய கொடுமைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள் என்பதற்கும் கேதீஸ்வரனின் வழக்கு தீர்ப்பு இன்னும் ஓர் உதாரணமாகும்.

இனவாத மற்றும் மதவாத முகம் கொண்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பிணை இன்றி சிறையில் வாடும் இளைஞர்களின் இளமை, குடும்ப வாழ்வு, எதிர்காலம், சமூகப் பொறுப்பு அனைத்தும் பறிக்கப்பட்டு சிறையில் வாடுகின்றார்கள் என்பதைவிட உயிரோடு கொலை செய்யப்படுகிறார்கள்.

2019ஆம் ஆண்டு உயிர்ப்பு தின குண்டுத்தாக்குதல் கொலைக்கு காரணமானவர்கள் என மக்களால் அடையாளப்படுத்தப்பட்டவர்கள் சுதந்திரமாக சுகபோகம் அனுபவிக்க, அப்பாவி முஸ்லிம்கள் இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் வாடுகின்றனர். செல்வாக்கு உள்ளவர்கள் வெளியில் வந்துள்ளனர்.

காலி முகத்திடல் போராட்டத்தை அழித்தொழிக்கவும் வன்முறையை கட்டவிழ்த்துவிடவும் மூல காரணமானவர்கள் இந்நாள் வரையில் கைது செய்யப்படாமல் உள்ளனர் என்றார்.

## மீன்பிடிக்க சென்ற இருவர் மாயம்

**கனகராசா சரவணன்**

பொத்துவில் பிரதேசத்தில் மீன்பிடிக்கச் சென்ற சென்ற இருவர் நேற்று (26) கரை திரும்பாமல் காணாமல் போயுள்ளனர் என அவர்களது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

பொத்துவில், பாக்கியவத்தை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய முஹமட் நௌவ்பர், 40 வயதுடைய முஹமது தாஹீர் ஆகிய இருவருமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் வழமைபோல நேற்று முன்தினம் (25) அதிகாலை பொத்துவில் கடற்கரையில் இருந்து இயந்திரப் படகில் மீன்பிடிப்பதற்காக சென்றுள்ளனர்.

அன்று மாலையே கரைக்குத் திரும்ப வேண்டிய இவர்கள், நேற்று மாலை வரையில் கரைக்கு திரும்பாமல் காணாமல் போயுள்ளனர்.

இதனையடுத்து கடற்படையினரின் உதவியுடன் இவர்களை தேடும் பணியை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## இன்று பேச்சு

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி தொடர்பிலான விசேட கலந்துரையாடல் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இன்று (27) நடைபெறவுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில், தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்கு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்ட வரையறைக்கு அமைய தலையீடு செய்யக்கூடிய விதம் குறித்து விரிவாக ஆராயப்படும்.

## எம்.பி படுகொலை 14 பேர் கைது

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவின் படுகொலை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் இதுவரை 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்ட பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் துப்பாக்கியை வைத்திருந்த, நிட்டம்புவ பகுதியை சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து பொலன்னறுவை நோக்கி மே.09 ஆம் திகதி பயணித்த போது, நிட்டம்புவ பகுதியில் ஏற்பட்ட வன்முறையில், எம்.பியும் அவரின் பாதுகாப்பு உத்தியோகத்தரும் உயிரிழந்தனர்.

பொலிஸ் சார்ஜன்ட் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன், அவரின் துப்பாக்கியும் அபகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனையில் சீனிக்கு தட்டுப்பாடு

**சகா**

கல்முனை பிராந்தியத்தில் நேற்று (26) சீனிக்கு பலத்த தட்டுப்பாடு நிலவியது. பெரும்பாலான கடைகளில் சீனி இல்லை என்று சொல்லபட்டதுடன், ஒரு சில கடைகளில் ஒரு கிலோ கிராம் 300 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. சீனியின் விலை 500 ரூபாய் வரை எகிறும் என பரவலாக பேச்சு அடிபட்டது.

கடந்த வாரம் ஒரு கிலோ கிராம் சீனி 220 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்நிலையில், இந்த வாரம் அது 250 ரூபாயாகி தற்போது 300 ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

இவ்வாறு ,சகல பொருட்களினதும் விலைகள் விசம் போல் அதிகரித்து வருவதையிட்டு, பொதுமக்கள் பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளனர்.


### எமது ஒத்துழைப்பு வேண்டுமாயின்

## ஜனாதிபதியும் அரசாங்கமும் ஓரடி பின்வாங்க வேண்டும்

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழங்கத்தயார். ஆனால் அதற்கு முன்னர் இந்த நாட்டை நாசமாக்கிய ஜனாதிபதியும் இந்த அரசாங்கமும் ஓர் அடி பின்வாங்க வேண்டும். அதேபோல் 21 ஆம் திருத்தத்தை கொண்டுவந்து, அதன் மூலமாக புதிய குழுவொன்றை நியமித்து, நெருக்டிகடியைக் கையாள எம்மால் முடியும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கையாகும். அதற்கான திருத்தம் ஒன்றினையும் முன்வைத்துள்ளோம். இந்நிலையில் அரசாங்கமும் 21 ஆம் திருத்த யோசனை ஒன்றினை முன்வைத்துள்ளது. இதில் நிறைவேற்று அதிகாரம் முழுமையாக நீக்கப்படும் நோக்கம் இல்லை. ஓரளவு அதிகார குறைப்பு இருப்பது உண்மையே. ஆனால் அர்த்தமில்லாத யோசனையாக இது கொண்டுவரப்பட்டுள்ளது. குறிப்பாக, ஜனாதிபதியால் விடயப்பரப்புகளை பெற்றுக்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின் நெருக்கடிக்கு இவ்வாறான தீர்மானங்களே காரணமாகும். அதேபோல் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் மீண்டும் ஜனாதிபதிக்கே வழங்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்காது ஏமாற்று வேலையினை செய்துள்ளனர்.

அதேபோல் புதிய நிதி அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர் இடைக்கால வரவு செலவு திட்டத்தை முன்வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், தற்காலிக ஏற்பாடுகளை கையாண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. முறையான நிதி முகாமைத்துவதை உருவாக்கிக்கொள்ள வேண்டும். மக்கள் வரிசையை தற்காலிகமாக குறைப்பதனால் வெற்றி கண்டுள்ளதாக நினைத்துவிடக்கூடாது.



ஆழமாக சில தீர்மானங்கள் எடுக்காது போனால் மீண்டும் நாடு நெருக்கடியில் விழும் என்றார்.

### மொழிப் புலமை இல்லாதவர்களுக்கும்

## வேலைவாய்ப்பை பெற்றுத் தாருங்கள்

ஜப்பான் மொழி புலமையில்லாத, பாடசாலைகளை விட்டு விலகிய ஆயிரக் கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு எதிர்வரும் சில மாதங்களில் தொழில்வாய்ப்பு பெற்று தருமாறு, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுச நாணயக்கார, இலங்கைக்கான ஜப்பானின் தூதுவராலயத்துக்கு பொறுப்பான சிரேஸ்ட தூதரக அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தூதரக அதிகாரி உள்ளிட்ட தூதரகத்தின் உயர்மட்ட அதிகாரிகளுக்கும் அமைச்சர் மனுச நாணயக்காரவுக்கும் இடையில் நேற்று (26) காலை நடைபெற்ற சந்திப்பிலேயே அமைச்சரால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் பாரியளவு தொழில்வாய்ப்புகள் காணப்பட்டாலும் மொழிப் பிரச்சினையால் இளைஞர்கள் ஜப்பான் செல்ல முன் வருவதில்லை. எனவே எதிர்வரும் காலங்களில் ஜப்பான் மொழி புலமையற்ற இளைஞர், யுவதிகளுக்கும் தொழில் வாய்ப்பை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு பதில் அளித்துள்ள தூதரக அதிகாரி, ஜப்பானில் காணப்படும் அதிக தொழில் வாய்ப்புகளை இலங்கையர்களுக்கு வழங்க, ஜப்பான் எப்போதும் சாதகமாகச் செயற்படும் எனத் தெரிவித்துள்ளார்.


### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர் :** எஸ் ஆர் எல் பவுடர் கோடிங் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் புதிய பெயர் :** ஐ எஸ் எப் ஜெனரல் ட்ரேட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**பதிவு அலுவலக முகவரி :** 3/4, ரொக்வுட் ப்ளேஸ், கொழும்பு 07.

**மாற்றம் நிகழ்ந்த திகதி :** 02.04.2022

**கம்பனியின் இலக்கம் :** PV 98217

**டைரக்டர்**
**க்ரஸ்டன் கோர்பரேட் சேர்விசஸ் (பிவிடி) எல்டீடி**
**கம்பனியின் செயலாளர்கள்.**

### பொது அறிவித்தல்

தம்புத்தேகம, சமன்ஹெலிய
இல. 404/06/42, முகவரியில் வசிக்கும் A.G. சுராஜ் லக்ஷான் (தே.அ.அ.இல.991640410V) ஆகிய நான் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் மருந்து வகைகளை அருகில் வைத்திருந்து குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டேன் மேலும் இதற்கு பிறகு இது போன்ற தவரை நான் செய்யமாட்டேன் என்பதனை இலங்கை வாழ் பொது மக்களுக்கு தெரிவித்துக்கொள்வதுடன் அனைவரிடமும் மன்னிப்பை வேண்டுகின்றேன்.

### அறிவித்தல்

2023 ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான பொது கருத்து மற்றும் மேம்பாட்டு முன்மொழிவுகளைப் பெறுதல்.

**ரிதீமாலியத்த பிரதேச சபை.**

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பரிசீலித்து வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு ரிதீமாலியத்த பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

எனவே, உங்களின் யோசனைகள் மற்றும் அபிவிருத்தி முன்மொழிவுகளை 30, ஜூன் 2022 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு முன்னர் எழுத்து மூலம் ரிதீமாலியத்த பிரதேச சபைக்கு சமர்ப்பிக்குமாறும் அல்லது, rideemaliyaddaps@gamail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**தலைவர்**
**ரிதீமாலியத்த பிரதேச சபை**


### மதுசாரம், போதைப்பொருள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு

## யாழ். பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



மதுசாரம், போதைப்பொருள் தொடர்பிலான சமூக விழிப்புணர்வை உருவாக்குவது பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையமும் கைச்சாத்திட்டுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் (25.05.2022) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றபோது, யாழ். பல்கலைக்கழகம் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் சார்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமணசேகரவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி, மதுசாரம், புகையிலை, போதைப்பொருட்கள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் உருவாக்கும் செயற்பாடுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் இணைந்து கொள்ளவிருக்கின்றனர்.

மக்கள் மத்தியில் இத்தகைய பாவனையினால் ஏற்பட்டுவரும் சமூகச் சிக்கல்கள் பற்றிய விழிப்புணர்விற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதுடன், அதுதொடர்பான ஊடகப்படைப்புகளை உருவாக்கும் பணிகளிலும் அவர்கள் ஈடுபடுவர்.

### மக்களை ஏமாற்றும் எரிசக்தி அமைச்சரே

# இராஜினாமா செய்யவும்

■ எப்.முபாரக், ஹஸ்பர்



எரிபொருள் விலையேற்றம் குறித்து பிழையான தகவலைக் கூறி, மக்களை ஏமாற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டுமென திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “எரிபொருள் விலையை திடீரென பெருந்தொகையால் அதிகரித்த எரிசக்தி அமைச்சர், இலங்கை பெட்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விநியோகம் மூலம் நட்டத்தை அனுபவித்து வருவதாகவும் அதனாலேயே பெரிய அதிகரிப்பை மேற்கொண்டதாகவும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

“இந்தளவு அதிக விலை அதிகரிக்கப்பட்ட போதும், இன்னும் சிறிது நட்டம் பெட்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அனுபவிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

“எரிசக்தி அமைச்சரது இந்தக் கூற்றுப் பிழையானதும் மக்களை ஏமாற்றும் விடயமாகும். இலங்கையில் ஐஓசி தனியார் நிறுவனமும் இதே விலைக்கே எரிபொருள் விநியோகம் செய்கின்றது.

“எந்தவொரு தனியார் நிறுவனமும் நட்டத்துக்கு பொருள் விற்பனை செய்வதில்லை. எனவே, ஐஓசி இந்த விற்பனை மூலம் இலாபம் பெறுகின்றது என்பதே அர்த்தமாகும். இந்நிலையில், பெட்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மட்டும் எப்படி நட்டம் ஏற்பட முடியும்?

“தனியார் நிறுவனத்துக்கு இலாபம் ஏற்படும் அதேவேளை பெட்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நட்டம் ஏற்படுகின்றதென்றால், அங்கு பிழையான நிர்வாகச் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும் அல்லது ஊழல் இடம்பெற வேண்டும்.

“எனவே, சரியான வெளிப்படைத் தன்மையான நிர்வாகம் செய்ய முடியாத, நாட்டு மக்களுக்கு பிழையான தகவலை வெளியிடும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும்” என்றார்.

### அம்பாறை மாவட்ட திட்டமிடல்

## பணிப்பாளராக மோகனகுமார்

■ சகா



அம்பாறை மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளராக திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்தைச் சேர்ந்த ரி.மோகனகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றிய கே.பாக்கியராஜா அண்மையில் நகர அபிவிருத்தி அமைச்சுக்குப் பணிப்பாளர் நாயகமாக பதவியுயர்வு பெற்றுச் சென்றதையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மோகனகுமார், இன்று வெள்ளிக்கிழமை (27) காலை 10 மணிக்கு தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

இவர், காரைதீவு பிரதேச செயலகத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றியுள்ளதுடன், நாவிதன்வெளி, திருக்கோவில், கல்முனை, அம்பாறை போன்ற பிரதேச செயலகங்களில் உதவி, பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வறுமையை சமாளிக்க

## உணவுப் பயிர்கள் நடல் ஆரம்பம்

■ எம்.எல்.எஸ்.டீன்



நாட்டில் ஏற்பட்டுவரும் வறுமையை சமாளிக்கும் முகமாக, பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ், உணவுப் பயிர்களை பயிரிடுவதற்கு பொதுமக்களை ஊக்குவிக்கும் நிகழ்வு, அக்கரைப்பற்று பிரதேச செயலக வளாகத்தில் அக்கரைப்பற்று சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம். ஹூசைன் தலைமையில் நேற்று (26) நடைபெற்றது.

தலைமைப்பீட முகாமையாளர் மற்றும் சமுர்த்தித் திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

மரவள்ளி, வற்றாளை போன்ற கிழங்குப் பயிர்கள் நடுகை செய்யப்பட்டன. இத் திட்டம் கிராம மட்டத்தில் பொதுமக்களிடையே தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளது.

### காட்டு யானைகளால்

## கிராமம் துவம்சம்



■ ஹஸ்பர்

திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெல்லாம் குளம் கிராமத்துக்குள் நேற்று (26) அதிகாலை புகுந்த காட்டு யானைகள், சுமார் 15க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள், சிறு குடிசைகள், பாதுகாப்பு வேலிகள் என்பனவற்றை துவம்சம் செய்துள்ளன.

இக்கிராமத்தில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. விவசாயம், விறகு எடுத்தல், பயிர் செய்தல் முதலான தொழில்களை இவர்கள் செய்து வருகின்றனர்.

அதிகாலை வேலை இரண்டுக்கும் மேற்பட்ட யானைகள் கிராமத்துக்குள் புகுந்து இவ்வாறு அட்டகாசம் செய்ததாக மக்கள் தெரிவித்தனர்.

இதனால் நான்கு வருடங்களாக பாதுகாக்கப்பட்டு வந்த காய்க்கக் கூடிய நிலையிருந்த தென்னை மரங்கள் வேரோடும், குருத்தோடும் பிடுங்கி அழிக்கப்பட்டுள்ளன.

இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் அங்கலாய்க்கும் அதேவேளை, ஏற்கெனவே யானை பாதுகாப்பு வேலி போடப்பட்டும் பயன் இல்லையெனவும் கவலை தெரிவித்தனர்.

எனவே, காட்டு யானைகளின் தொல்லைகளில் இருந்து தம்மையும் தமது வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

## காரைதீவில் டெங்கொழிப்பு



■ சகா

காரைதீவு சுகாதார பகுதியில் டெங்கொழிப்பு நடவடிக்கை தொடர்ச்சியாக இவ்வாரமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா பஷீர் தலைமையிலான குழுவினர் இவ்வொழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொதுச் சுகாதார பரிசோதகர் ஜமீல் தலைமையிலான குழுவினர் வீடுவீடாகச் சென்று, இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

### ஆற்றுவாழைத் தாவரங்களால்

## மட்டக்களப்பு வாவிக்கு ஆபத்து

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வாவியான மட்டக்களப்பு வாவி, பெருகிவரும் ஆற்றுவாழைத் தாவரங்களால் அழிவடைந்து வருவதுடன், மீனவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குறித்த வாவியில் மீன்கள் பாடலிசைத்ததால், ‘பாடும் மீன்கள் வாழும் வாவி’ என குறித்த வாவி சர்வதேச புகழ் பெற்றது.

மட்டக்களப்பு வாவியில் சுமார் 15 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. தற்போது ஆற்றுவாழைத் தாவரங்களின் பெருக்கத்தால் தோணிகளைத் தள்ள முடியாமல் மீனவர்கள் அவதியுறுகின்றனர்.

எனவே, வாவியை அழித்துவரும் ஆற்றுவாழைகளை உடனடியாக அகற்றித்தருமாறு, மீனவர்கள் கோரிக்கை விடுக்கினறனர்.

### முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள்

# போராட்டத்தில் குதித்தனர்

### மண்ணெண்ணெய் இன்மையால் வாழ்வாதாரம் கேள்விக்குறி








■ சண்முகம் தவசீலன், செ.கீதாஞ்சன்

மண்ணெண்ணெய் இல்லாமையால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மண்ணெண்ணெய்யை பெற்றுத் தரக் கோரி, முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர்கள், நேற்று (26) கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்தில் இருந்து காலை 10.30க்கு பேரணியை ஆரம்பித்து, முல்லைத்தீவு மாவட்டக் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள அலுவலகம் உடாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் வரை அவர்கள் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கடற்தொழிலாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது மாவட்டச் செயலாளர் க.விமலநாதன், போராட்டக்காரர்களை உள்ளே அழைத்து, அவர்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஏற்றுக்கொண்டார்.

“சாலை தொடக்கம் கொக்குளாய் முகத்துவாரம் வரையான எமது மீனவர்கள் மற்றும் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்து தொழில் புரியும் மீனவர்களுக்கும் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, நாயாறு போன்ற எரிபொருள் நிலையங்கள் ஊடாகவே எரிபொருள் விநியோகம் நடைபெற்று வருகின்றது.

“இருந்த போதிலும் இவ் எரிபொருள் நிலையங்களுக்கு வரும் எரிபொருளானது எமது மாவட்ட மீனவர்களுக்கு போதுமானதாகவில்லை. 08.05.2022 தொடக்கம் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் வரவில்லை. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், விலையேற்றம் காரணமாக மக்கள் பட்டிணிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

“எனவே, தயவுசெய்து எமது மீனவ மக்களின் இந்நிலையை கருத்தில் கொண்டு அவர்கள் தொழில் புரிவதற்கான எரிபொருளை பெற்றுத்தருமாறு, மீனவர்கள் சார்பாகவும் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் அமைப்பு சார்பாகவும் கேட்டுக்கொள்கின்றோம்” என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இதன்போது கடற்தொழிலாளர்களிடம் கருத்துத் தொரிவித்த மாவட்டச் செயலாளர் க.விமலநாதன், “உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது பொதுவாக எல்லா மாவட்டத்திலும் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது. மீனவர்கள் மாத்திரமல்ல விவசாய உற்பத்தி வீதமும் குறைந்துள்ளது.

“எரிபொருள் விநியோகத்துக்கு பொறுப்பான பிராந்திய முகாமையாளருடன் கதைத்துள்ளோம். இன்று இரண்டு லோட் மண்ணெண்ணெய் அனுப்புவதாக உறுதிமொழி தந்துள்ளார்கள்.

“மாவட்ட மீனவர்களின் கோரிக்கையை கடற்றொழில் அமைச்சுக்கும் எரி சக்தி அமைச்சுக்கும் நாங்கள் அனுப்பவுள்ளோம்” என்றார்.

குறித்த போராட்டத்தை மீனவர்கள் ஆரம்பித்த போது, சம்பவ இடத்துக்கு வருகைதந்த இராணுவத்தினர் மண்ணெண்ணெய் பெற்றுத்தருவதாக மீனவர்களுடன் கலந்துரையாடி போராட்டத்தை நிறுத்த முயற்சித்திருந்தனர். இருப்பினும், மீனவர்கள் அதற்கு உடன்படாமல் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



### காணாமல் ஆக்கப்பட்டோரை தேடிய

## 115 உறவுகள் உயிரிழப்பு

■ க.அகரன்

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தமது உறவுகளின் விடுதலையை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்களை நீண்டகாலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு சொல்லெண்ணா துன்பங்களை சுமந்து வயோதிப ஓய்வு காலங்களில் நோய்வாய்பட்டு வைத்தியசாலைகளிலும் ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் பலர் இருந்து வருகின்றனர்.

இவர்களின் 115 உறவுகள் நோயால் பீடிக்கப்பட்டு இதுவரையில் உயிரிழந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 15 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக உறவுகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வீதிகளிலிருந்து தமது போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேசத்தின் தலையீடுகளை கோரியும் ஐக்கிய நாடுகள் தமது விடயங்களில் தலையிட்டு தீர்வுகளைப் பெற்றுத்தருமாறு கோரியும் உறவுகள் தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## முன்பள்ளி அங்காடி...

கொடுக்கல் – வாங்கல் செயற்பாட்டை மழலைகளுக்கு கற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன், கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள றோயல் முன்பள்ளி மாணவர்களின் அங்காடி விழா நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வின் விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனையின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.யுவராஜ் கலந்துகொண்டார்.

(படங்கள்: மு. தமிழ்ச்செல்வன்)







சம்பளக் குறைப்பு;

# பணிப்பாளரை மொய்த்த வைத்தியர்கள்

பாலித ஆரியவன்ஸ

வைத்தியர்களின் மேலதிக கொடுப்பனவு மற்றும் கடமை கொடுப்பனவு என்பன குறைக்கப்படுவதாகத் தெரிவித்து, பதுளை பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள், நேற்று (26) வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்துக்குள் புகுந்து, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் பிரதான நிதி அதிகாரியின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள கடிதத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மனு ஒன்றும் சுகாதார அமைச்சிடம் கையளிப்பதற்காக, அரச வைத்திய அதிகாரிகள் சங்க பதுளை கிளையின் தலைவர் வைத்தியர் பாலித ராஜபக்ஷவால், வைத்தியசாலையின் பணிப்பாளர் உபுல் கருணாரத்னவிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வாறு கையளிக்கப்பட்ட மனுவில், பதுளை பொது வைத்தியசாலையின் தொழிற்சங்கக் குழுவினர் கையெழுத்திட்டுள்ளனர்.

பல்வேறு வழிகளில் பெற்றுக்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக அடிப்படை சம்பளம் குறைவாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தச் சம்பள குறைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவித்த வைத்தியர் பாலித ராஜபக்ஷ, வைத்தியர் பற்றாக்குறை காரணமாக ஒரு வைத்தியர் 10 பேரின் கடமைகளை அர்ப்பணிப்புடன் செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

எனவே, இவ்வாறான வைத்தியர்களுக்கு சம்பள குறைப்பு முன்னெடுக்கப்படுவது அநியாயமான செயல் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கெடுபிடிகளுக்கு மத்தியில் மலையகத்தில்

# மண்ணெண்ணெய் விநியோகம்

## பல இடங்களில் அடிதடி

மலையக நிருபர்கள்

சமையல் எரிவாயு தட்டுப்பாடு, விலை அதிகரிப்புடன் நாடு முழுவதும் மண்ணெண்ணெய்க்கான கேள்வி, நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. மலையக நகரங்களிலும் இன்று மண்ணெண்ணெய் அத்தியாவசிய பொருளாக மாறிவிட்டது.

மண்ணெண்ணெய்யைப் பெறுவதற்கு பல மணித்தியாலங்கள், பல நாள்கள் நுகர்வோர் காத்திருக்க வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. அவ்வாறு காத்திருந்து தமக்கான மண்ணெண்ணெய்யைப் பெறுவதில் பல கெடுபிடிகளை மக்கள் எதிர்கொள்கின்றனர்.

இதற்கமைய, பல நாள்களுக்குப் பின்னர் நேற்றைய தினம் (26) கொட்டகலை சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு 3,300 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது. குறித்த மண்ணெண்ணெய்யைப் பெறுவதற்கு அதிகாலை தொடக்கம் நீண்ட வரிசை காணப்பட்டது.

இவ்வாறு வரிசையில் நின்றவர்களுள் திம்புள்ளை, பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு மாத்திரமே மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும் என வரிசையில் நின்ற மக்களுக்கு, பொலிஸார் அறிவுறுத்தினர்.

இதனையடுத்து வரிசையில் நின்றவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியது. பின்னர் நிலைமை சீர்செய்யப்பட்டது.






எனினும், தலா 250 ரூபாய்க்கே நுகர்வோருக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எரிபொருள் நிலைய உரிமையாளர் தெரிவித்தார்.

ஹட்டன் நகரில் 16 நாள்களுக்குப் பின்னர் நேற்று (26) மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்ட போது, அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு 3,300 லீற்றர் மண்ணெண்ணெய்யே விநியோகிக்கப்பட்ட நிலையில், இதனைப் பெறுவதற்காக, அதிகாலை தொடக்கம் ஆயிரக்கணக்கான மக்கள் வரிசைகளில் நின்றனர்.

இதன்போது, ஒருவருக்கு தலா 150 ரூபாய்க்கு ஒன்றரை லீற்றர் மண்ணெண்ணெய்யே விநியோகிப்பட்டதால், நுகர்வோருக்கும் எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்து, எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பாதுகாப்புக்காக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவம் மற்றும் பொலிஸாரால் நிலைமை சுமூகமாக்கப்பட்டது.

சிலர், தமது குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் வரிசையில் நிறுத்தி, மண்ணெண்ணெய்யைப் பெற்றுக்கொள்வதாக வரிசையில் நின்ற பலர் இதன்போது குற்றஞ்சுமத்தினர்.

### இராகலைக்கு மண்ணெண்ணெய் இல்லை

கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக இராகலை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், விவசாய காணிகளில் இடப்பட்டுள்ள பயிர்களுக்கு மண்ணெண்ணெய் ஊடாக இயங்கும் தண்ணீரை வழங்குவதற்கும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு நிலவுவதால் விவசாய பயிர்கள் காய்ந்து போவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதே நேரத்தில் நுவரெலியா மற்றும் இராகலை நகரங்களில் காணப்படும் இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரமே மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது.

இருப்பினும், இந்த இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடு நிலவுவதால், நுவரெலியா, கந்தப்பளை, இராகலை ஆகிய பிரதேச மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

சில தனியார் பஸ் சாரதிகளின் செயற்பாட்டால்

# ஏனைய வாகன சாரதிகளுக்கு பாதிப்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் தனியார் பஸ் தரிப்பிடத்திலிருந்து தினமும் குறுகிய தூர சேவைகளில் ஈடுபடும் சில தனியார் பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் தமது பஸ்களில் உள்ள டீசலை கேன்களில் நிரப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மீண்டும் டீசலைப் பெறும் நோக்கிலேயே, வரிசையில் தமது பஸ்களை நிறுத்தி இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாக வரிசையில் நிற்கும் ஏனைய வாகனங்களின் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

பஸ்களுக்கு வரையறையின்றி டீசல் விநியோகிக்கப்படும் நிலையில், சில தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகளால் ஏனைய வாகனங்களுக்கு டீசலை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படுவதாக பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.











# நினைவு கூரல்...

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 2ஆம் ஆண்டு நினைவுகூரல் நிகழ்வுகள், மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று (26) நடைபெற்றன.
குறிப்பாக, கொட்டகலை, நுவரெலியாவில் பல விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

(படங்கள்: எஸ். கணேசன், ஆ. ரமேஸ்)

# அமர்ந்திருந்து அமரரானார்

ராமு தனராஜா

ஹப்புத்தளை, பெரகலை பகுதியில் ஆணொருவரின் சடலம், நேற்று முன்தினம் (25) மீட்கப்பட்டுள்ளது.

பெரகலை பகுதியில் உள்ள பொது மலசலகூடம் செல்லும் படியில், அமர்ந்தவாறே இவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் இரத்தினபுரி, கரப்பிஞ்ச பகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவர் என ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்ததுடன், இவரின் மரணம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

# நீராடச் சென்ற மூவர் மரணம்

மஹியங்கனை, தம்பராவ குளத்தில் குளிக்கச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

45 வயதான தந்தை, 15 மற்றும் 10 வயதான இரண்டு மகன்மாரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் (25) பகல் குறித்த மூவரும் நீராடச் சென்று வீடு திரும்பாத நிலையில், வீட்டார் குறித்த குளப் பகுதியில் தேடியுள்ளனர்.

இதன்போதே, மூவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதுடன், சடலங்கள் மஹியங்கனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

போராட்டக்காரர்களின் கோரிக்கைகளை

# ஆட்சியாளர்கள் செவிமடுக்க வேண்டும்

## சர்வமதக் குழுவினர் ஏகமனதான தீர்மானம்

எம். செல்வராஜா

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியை முன்னிலைப்படுத்தி, இன, மத, கட்சி பேதமின்றி ஒன்றிணைந்த போராட்டங்களில் இளைஞர்கள் ஈடுபட்டிருகின்றனர். இப் போராட்டங்களில் அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்கள் செவிமடுக்க வேண்டுமென சர்வமதக் குழுவினர் ஏகமனதான தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

பதுளை மாவட்ட சர்வமதக் குழுவினரின் கூட்டம், பதுளை 'ரிவர் சைட்' கிரான்ட் விடுதியில் நேற்று (26) நடைபெற்ற போதே, அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து தெரிவித்த அவர்கள், "நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடி, எரிபொருள் விலையேற்றம், எங்கு பார்த்தாலும் வரிசைகள் என்ற வகையில் நாட்டு மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களை எதிர்நோக்கியுள்ளனர்.



"நாட்டில் கூடுதலான அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டிருக்கின்றமையால், எவரின் குரலுக்கும் செவிமடுக்காமல் தன்னிச்சையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதுவே, நாட்டில் ஏற்பட்டிருக்கும் பாரிய நெருக்கடி நிலைக்கு மூல காரணமாகும். அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க வேண்டியது முக்கியமாகும். இன்னும் ஓரிரு மாதங்களில் நாட்டு மக்களினது உணவுக்கும் வழியின்றி, பஞ்சம் தலைவிரித்தாடப் போகின்றது.

"இத்தகைய ஆரோக்கியமற்ற சூழல் காணப்படும் இவ்வேளையில், எமது நாட்டில் இன, மத, கட்சி பேதங்களுக்கப்பால், இளைஞர்கள் ஓரணியில் திரண்டு செயற்படுகின்றனர். இத்தகைய நிலை நாட்டில் ஸ்தீரனமானதோர், ஆரோக்கியமுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்பக் கூடியதாகவிருக்கின்றது. இவ் விடயத்தில் மகிழ்ச்சியடைய வேண்டியுள்ளது" என்றனர்.

# வெறிச்சோடிய ஹோட்டல்கள்

பி.கேதீஸ்

சமையல் எரிவாயு இன்மையால் மலையகத்திலுள்ள ஹோட்டல் உரிமையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

குறிப்பாக தலவாக்கலை, நானுஓயா பகுதியில் நேற்று (26) ஹோட்டல்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

சமையல் எரிவாயு இன்மையால், பராட்டா, கொத்து, வடை போன்ற உணவுகளைத் தயாரித்து நுகர்வோருக்கு வழங்க முடியவில்லை எனவும் அத்தோடு, தாங்கள் பொருளாதார ரீதியில் பின்னடைவை சந்தித்து வருவதாகவும் ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், தங்களின் ஹோட்டல்களில் வேலை செய்யும் ஊழியர்கள் பாரிய பொருளாதாரப் பிரச்சினைக்கு உள்ளாகி வருவதாகவும் ஊழியர்களுக்கு வேலை வழங்க முடியாமல் உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.



வியாபாரம் அற்ற நிலையில், மாத இறுதியில் கடை வாடகை, மின் மற்றும் நீர் கட்டணங்களை செலுத்துவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ஹோட்டல் உரிமையாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே, சமையல் எரிவாயு இன்மை பிரச்சினையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருமாறு, அவர்கள் வேண்டி நிற்கின்றனர்.

# அச்சிடும் பணத்தை நுகர்வுக்கு செலவிட்டால் பணவீக்கம் ஏற்படும்

பணத்தை அச்சிடுவது கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கின்றது. மேன்மேலும் அச்சடிக்கப்படுமாயின், பணவீக்கம் ஏறுமுகத்தில் சென்றுகொண்டே இருக்கும். இதனூடாக, பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் தலைக்கு மேல் எகிறும். அதனைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக, மீண்டும், மீண்டும் பணத்தை அச்சிடவேண்டும். தற்போதைக்கு, பண வீக்கம் கிட்டத்தட்ட 30 சதவீதத்துக்கு வந்துவிட்டது.

இதற்கிடையே, எதிர்வரும் மாதங்களில் பணவீக்கம் 40 சதவீதமாக அதிகரிக்குமென தெரிவித்துள்ள நிதியமைச்சரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஒரு ரில்லியன் ரூபாயை, (ஒரு இலட்சம் கோடி) அச்சிடப்போவதாக அறிவித்துள்ளார்.

கிடைக்கும் சம்பளத்துக்கு வேலை செய்வதை விடவும் மேலதிகமாக எவ்விதமான தொழிலையும் செய்யமுடியாத நிலைமையொன்றே ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுள்ளது. வேலை இல்லாதவர்கள், வேலையிழந்தோர் மற்றும் தங்கிவாழ்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

அதனால், எதற்கெடுத்தாலும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், போராட்டங்கள் நடத்தப்படும். தங்கிவாழ்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பதன் ஊடாக குடும்பச் சுமையும் தலைக்கு மேல் கூடிவிடும். இவை, நாட்டில் ஸ்திரமற்ற நிலைமையைத் தோற்றுவித்துவிடும்.

அரச ஊழியர்களின் சம்பளத்தில் துண்டு விழுந்துள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன. அன்றாடம் கூலி வேலை செய்து ஜீவியம் நடத்துவோரில் சிலருக்கு பிரச்சினையே இருக்காது. ஏனெனில், கூலி வேலை கிடைத்தால், உண்டு மகிழ்வர். இல்லையேல் வயிற்றையும் வாயையும் கட்டிக்கொண்டு அப்படியே இருந்துவிடுவர்.

மேல்குடி வர்க்கத்தினரையும் வெகுவாக பாதிக்காது. ஆனால், மத்திய தர வர்க்கத்தினருக்கே இந்த நெருக்கடி கடும் நெருக்குதல்களைக் கொடுக்கும். ஏனெனில், பெரும்பாலானவர்கள் மாதச் சம்பளத்தை மட்டுமே நம்பி வாழ்க்கையை நடத்துபவர்களாக இருக்கின்றனர். திட்டமிடும் முன்னரே, கடனுக்குச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் தொங்கிக்கொண்டிருக்கின்றனர்.

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் பொருட்களின் விலைகள், சேவைகளின் கட்டணங்கள் கழுத்தை நெரிக்கின்றன. ஆகையால், அச்சிடும் பணத்தை உற்பத்திக்குக் பயன்படுத்தி, நுகர்வுக்காக செலவிடவேண்டும். இல்லையேல் பணவீக்கம் அதிகரிப்பதை தடுக்கவே முடியாது. அச்சிடும் பணம், சமுர்த்தி உள்ளிட்ட நிவாரணங்கள், இலவச சேவைகள் உள்ளிட்டவற்றுக்கும் அரச ஊழியர்களுக்கான சம்பளத்தைக் கொடுப்பதற்கும், பயன்படுத்தப்படுமாயின், பணவீக்கம்தான் ஏற்படும்.

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், செலவுகள் இரண்டு மடங்கில் அதிகரிக்கும். போக்குவரத்து, சிற்றுண்டிகள் மற்றும் காகிதங்கள் ஆகியவற்றின் மீதான செலவுகளும் கூடியிருக்கும். ஆனால், சம்பளத்தில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்பட்டிருக்காது என்பதை நினைவில் கொள்ளவே வேண்டும்.

ஆக இருப்பதைக்கொண்டும், அத்தியாவசியமற்ற தேவைகளைத் தவிர்த்தும், செலவுகளைச் செய்தால் ஓரளவுக்குத் தாக்குப்பிடித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கலாம். எவ்விதமான மேலதிக முயற்சிகளையும் மேற்கொள்ளாது கையைக் கட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால், நிலைமையை சமாளிக்கவே முடியாது என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்வதே உத்தமம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# உள்நாட்டுக் கடனைப் பற்றிப் பேசுவது எப்போது?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் வரலாற்றில், வாங்கிய வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தவியலாத நிலையில், முதன்முறையாக நாடு வங்குரோத்தாகியுள்ளது. உலகளாவிய ஊடகங்களில் இது முக்கிய பேசுபொருளாகியுள்ளது. 21ஆம் நூற்றாண்டில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில், இவ்வாறு வங்குரோத்தான முதலாவது நாடு இலங்கையாகும்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன. முதலாவது, அரசுக்கெதிரான ஓர் எதிர்ப்பியக்கம் காலிமுகத்திடலில் போராடுகையில், அது சர்வதேச கவனம் பெறவில்லை; ரம்புக்கனையில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவரின் மரணமோ, காலிமுகத்திடலில் ஏவப்பட்ட வன்முறையோ, சர்வதேச கவனத்தைப் பெறவில்லை. ஆனால், இலங்கையால் பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடனை மீளக்கொடுக்க இயலவில்லை என்கிறபோது, சர்வதேச கவனம் இலங்கை மீது திரும்புகிறது. ஏன்? இது முக்கியமானதொரு கேள்வி.

எரிபொருளுக்கும் எரிவாயுச் சிலிண்டர்களுக்கும் தொடர்ச்சியாக வரிசையில் நிற்கையில், அடுத்தவேளை உணவுக்கான வருவாயைத் தேடுவதே குதிரைக் கொம்பாக இருக்கையில், மருந்துப் பொருட்கள் எதுவுமற்ற நிலையில், இலங்கையின் பொருளாதாரத்தைச் சூழ்ந்து அரங்கேறும் சூதாட்டங்களைக் கவனிக்க, அன்றாடங்காய்ச்சிகளுக்கும் குடிமக்களுக்கும் நேரமோ அதற்கான வலுவோ இல்லை. இதை ஆட்சியாளர்களும் அதிகாரவர்க்கமும் நன்கறியும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெற்றுவிட்டால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்ற பொய்யை நம்பவைக்க, இந்த நெருக்கடியும் அது தொடர்ந்து தீவிரமடைவதும் பயன்பட்டிருக்கிறது. அப்பாவி இலங்கையர்கள், சர்வதேச நாணய நிதியம் தான் 'ஆபத்பாண்டவன்' என்று நம்பியிருக்கும் அவலம் நடந்தேறியிருக்கிறது.

இன்று எல்லோரது கவனமும் அக்கறையும், இலங்கையின் வெளிநாட்டுக் கடன் பற்றியது. இலங்கை வெளிநாட்டுக் கடனை கட்டவியலாமல் வங்குரோத்தாயிருக்கிறது என்பது, இலங்கையர்களுக்கு அவமானம் என்று பலர் சொல்கிறார்கள். இதில் இலங்கையர்கள் அவமானப்பட ஒன்றுமில்லை. ஏனெனில் வாங்கப்பட்ட கடனின் பலனை சாதாரண இலங்கையர்கள் அனுபவிக்கவில்லை. அது ஒருசிலரின் கஜானாக்களை நிறைத்தது. இன்னும் சிலருக்கு மேலதிக வருமானத்தைத் தந்தது. அவ்வளவே!

இலங்கையின் மொத்த வெளிநாட்டுக்கடன் 51 பில்லியன் அமெரிக்க டொலர். இதில் 55%மானவை நிதிச்சந்தைகளில் இருந்து பெறப்பட்டவை. இவற்றில் பெரும்பாலானவை, 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெறப்பட்ட உயர் வட்டிவீதம் குறைந்த திருப்புச்செலுத்தல் காலம் என்பவற்றைக் கொண்ட கடன்கள் ஆகும்.

இந்தக் கடன்கள், உலகின் பலநாடுகளில் தனியார் நிதியமைப்புகளில் இருந்து பெறப்பட்டவை. இந்தக் கடன்களைத் திருப்பச் செலுத்த இயலாமையே இலங்கையை வங்குரோத்தாக்கியது. ஏனைய 45% வெளிநாட்டுக் கடன், பிற நாடுகளில் இருந்தும் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச அமைப்புகளில் இருந்தும் பெறப்பட்டவை.

இலங்கை எந்தெந்தத் தனியார் நிதியமைப்புகளில் இருந்து கடனைப் பெற்றிருக்கிறது என்பது பற்றிய தகவலை இன்றுவரை வெளிப்படுத்தத் தயங்குகிறது.

அதேவேளை, இலங்கை நெருக்கடி உச்சத்தைத் தொட்டுக்கொண்டிருந்தபோதும் இவ்வாண்டு ஜனவரி மாதம் பெற்றிருந்த கடனுக்கான வட்டியாக 500 மில்லியன் அமெரிக்க டொலரை ஒரு தனியார் நிதியமைப்புக்கு வழங்கியது. இலங்கை அந்நியச் செலவாணி நெருக்கடியில் இருக்கையில் இவ்வளவு பெரிய தொகை ஏன் வழங்கப்பட்டது என்பது விடையற்ற வினாவாகவே இருக்கிறது.

சில தினங்களுக்கு முன் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்புச் செய்வதற்கான பேச்சுகளில் ஈடுபடுவதற்காக, இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களை இலங்கை அரசாங்கம் தெரிவுசெய்துள்ளது.

இலங்கை அரசாங்கம் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் என்பதை பிரதமரும் அமைச்சர்களும் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகிறார்கள். அதற்கு சர்வதேச நாணய நிதியம் உதவவேண்டும் என்று கோரி வருகிறார்கள். வெளிநாட்டுக் கடனுக்காகவே உலகளாவிய ரீதியில் இலங்கை கவனம் பெற்றிருக்கிறது.

இங்கு எழுப்பவேண்டிய கேள்வி யாதெனில், வெளிநாட்டுக் கடனை விட அதிகளவாக இருக்கின்ற உள்நாட்டுக் கடன் பற்றிப் பேசுவார் யாருமில்லை. அது இன்று பேசுபொருளில்லை.

இலங்கையின் மொத்த உள்நாட்டுக்கடன் 81 பில்லியன் அமெரிக்க டொலர். வெளிநாட்டுக் கடனோடு ஒப்பிடுகையில் இது மிகப்பெரியது. ஆனால் இது குறித்தும் ஒருவரும் வாய் திறக்கிறார்கள் இல்லை. இங்கு இரண்டு மேற்கோள்களை சுட்டுவது பொருத்தம்.

'வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பது இலங்கைக்கு முன்னுரிமையாக இருப்பதால், அரசாங்கப் பத்திரங்கள் மற்றும் அபிவிருத்திப் பத்திரங்கள் வடிவில் உள்ள உள்நாட்டுக் கடன்கள் மறுசீரமைக்கப்படாது' என்று கடந்தமாதம் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்தார்.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநரும் ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகருமான இந்திரஜித் குமாரசுவாமி, மார்ச் மாத இறுதியில் 'டெய்லி மிரர்' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் பின்வருமாறு தெரிவித்தார்: "நாங்கள், உள்நாட்டுக்கடனை மறுசீரமைப்பது குறித்துப் பேசக் கூடாது. அது சிந்திக்ககூடாதவொரு விடயம், ஏனெனில் அவ்வாறு மறுசீரமைப்பதால் எம்மால் எமது வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்த இயலுமா? இல்லை. மேலும் உள்நாட்டுக் கடனில் கைவைப்பது மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தும். அது எமது வங்கித் துறையை மட்டுமன்றி மொத்த நிதியமைப்பையே சரித்துச் சிதைத்துவிடும்" என்றார்.

இங்கு இரண்டு விடயங்கள் முக்கியமானவை. முதலாவது, வெளிநாட்டுக்கடனை விட உள்நாட்டுக்கடன் அதிகமாக இருக்கிறபோதும் அதை மறுசீரமைக்க அரசாங்கமோ அலுவலர்களோ விரும்புகிறார்கள் இல்லை.

இரண்டாவது, எப்படியாவது வெளிநாட்டுக்கடனைத் திருப்பிச் செலுத்திவிட வேண்டும் என்றே இவர்கள் அக்கறை காட்டுகிறார்கள். இந்த நடத்தையை விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் ஜோன் பேர்கின்ஸ் எழுதிய 'ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்' என்று நூலை வாசிப்பது பயனுள்ளது.

இன்று இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் அவசியம், திறந்த சந்தையின் முக்கியத்துவம், வெளிநாட்டுக்கடனைத் திருப்பிச் செலுத்த அரசை வலியுறுத்தல் ஆகியவற்றைச் செய்பவர்கள் அனைவருமே பொருளாதார அடியாள்கள். இது குறித்துப் பிறிதொரு தடவை பார்க்கலாம்.

உள்நாட்டுக் கடனுக்கு வருவோம். முதலில் உள்நாட்டுக் கடன் என்றால் என்னவென்று பார்ப்போம். அரசாங்கம் நாட்டுக்குள்ளேயே தனது தேவைகளுக்காகக் கடனைப் பெற்றுக்கொள்கிறது.

இவ்வாறு அரசாங்கத்தால் பெறப்படும் கடன் உள்நாட்டுக் கடன் எனப்படும். இலங்கையின் மொத்த உள்நாட்டுக்கடன் பிரதானமாக மூன்று வழிகளில் பெறப்பட்டுள்ளது. (1) திறைசேரி உண்டியல்கள் (2) திறைசேரி முறிகள் (3) பிற கடன்கள்.

இலங்கையின் மொத்த உள்நாட்டுக்கடனில் 18%மானவை திறைசேரி உண்டியல்களாகவும் 63%மானவை திறைசேரி முறிகளாகவும் உள்ளன. இதில் திறைசேரி உண்டியல்கள் குறுகிய காலத்திற்குப் பெறப்படுபவை.

நீண்டகாலத்திற்குப் பெறப்படும் திறைசேரி முறிகளில் பெரும்பான்மையானவை ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டவை. மொத்த உள்நாட்டுக் கடனில் 29%மானவை ஊழியர் சேமலாப நிதியிலிருந்தும் 8%மாவை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியிலிருந்தும் பெறப்பட்டவை.

இலங்கை அரசாங்கம் உள்நாட்டுக் கடன் குறித்து அக்கறையில்லாமல் இருப்பதற்கான காரணம், இக்கடன் இலங்கை மக்களுக்கு அரசு கொடுக்க வேண்டிய கடன். இதை யாரும் கேட்கப் போவதில்லை, கேட்டாலும் அதைத் தட்டக்கழிக்கக்கூடிய வகையிலேயே இலங்கையின் அரச கட்டமைப்பு உள்ளது.


இதை இரண்டு சிறிய உதாரணங்களுடன் விளக்கலாம். முதலாவது, ஒருவர் தனது ஊழியர் சேமலாப நிதியையோ ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியையோ பெறுவதற்குப் போனால் இத்தனை நாள்களுக்குள் அதனை வழங்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எனவே அதை தேவையான காலம் தள்ளிப் போடலாம்.

இரண்டாவது உதாரணம், புதிதாக ஓய்வுபெற்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் காலதாமதம் நிகழ்கிறது. கொரோனா, மின்சாரம் இல்லை, வீட்டிலிருந்து வேலை எனப் பல காரணங்களைக் காட்டி இத்தாமதம் நிகழ்கிறது. உள்நாட்டுக் கடனில் பேசப்படாத இன்னொரு வகை யாதெனில் வங்கிகள் அரசுக்குக் கொடுத்த கடன்கள். அரசாங்கம், வெளிநாட்டுக் கடனைப் பெறமுடியாத நிலையில் அரச வங்கிகள் அந்நியச் செலாவணியில் வெளிநாட்டுக் கடனைப் பெற்று அதை அரசுக்குக் கொடுத்துள்ளன.

ஆனால் உள்நாட்டு வங்கி, அரசுக்குக் கொடுத்த கடன் என்ற வகையில் அது உள்நாட்டுக் கடன் என்ற வகையிலேயே அடங்குகிறது.

ஆனால், அவை வெளிநாட்டுக்கு அந்நியச் செலாவணியில் செலுத்த வேண்டிய கடன். இதனை செலுத்த இயலாமையால் அரச வங்கிகள் நெருக்கடியில் உள்ளன.

இதனைக் காரணம் காட்டி, சர்வதேச நாணய நிதியம் அரச வங்கிகளைத் தனியார்மயமாக்கக் கோருகிறது. உள்நாட்டுக்கடன் மிகப்பெரிய கருந்துளை. அது ஏன் பேசப்படுவதில்லை என விளங்குவது, இலங்கை குடிமக்களுக்கு மிகவும் முக்கியமானது.



## வாழ்வியல் தரிசனம்

காவியுடை தரித்துக் கொண்டு, கண்டபடி வாழக்கூடாது. எத்தர்களின் நடிப்பு, என்றைக்கும் எதிர்பார்த்தபடி நடக்கமாட்டார்கள். ஆன்மிகம் பேசும் நபர்கள், தங்களின் பேச்சுகள் மூலம், இன்று மக்களை ஏமாற்றுவது கண்கூடு. மாயை, மயக்கத்தில் இருந்து மக்கள் விடுபட வேண்டும்.

அன்பால் இணைந்த உலகத்தைப் போலியான பிரசாரங்களால் முறியடிக்க முடியாது. இன்று பணபலமில்லாத சாமிகள் (ஆசாமிகள்) மிகக்குறைவு. இவர்களுக்கு எதற்குப் பணம்?

முன்னைய காலத்தில், உலகத்தை வெறுத்த ஞானிகள் அருளுரை ஆற்றினார்கள். அவர்களுக்கு ஆசைகள் இருக்கவில்லை. கிடைத்ததைச் சாப்பிட்டார்கள். எந்த ஊருக்கும் கால்நடையாகத் திரிவார்கள். புண்ணிய தலங்களுக்கும் நடந்தே செல்வார்கள். மக்கள் ஓடிவந்து வணங்கி, ஆசிர்வாதம் பெறுவார்கள். எதையும் கேட்டுவாங்குவது கிடையாது.

இன்று அப்படியா? சொந்த விமானங்கள்; மாளிகை போல் வீடு; அரசியல் செல்வாக்கு; பெரும் பணக்கார சீஷ்யர்கள் எனப் பல தொடர்புகள்.

இவர்கள் வியாபாரிகளா? அரசியலில் புகுந்து விளையாடுகிறார்கள். பக்தி ஆசைகளை அடக்கும். நிர்மல மனமே ஆன்மிகத்தின் தளம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஜீவனோபாயம் முற்றாகச் செயலிழப்பு

எரிபொருள் இன்மை காரணமாக குறிப்பாக மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால், கிழக்கு மாகாணத்தில் கடற்றொழிலாளர்கள் பல்வேறு வாழ்வாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.

மண்ணெண்ணெய் இன்மையால் தமது மீன்பிடி படகுகளைச் செலுத்த முடியாமலும் அதனால் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமலும் அல்லலுறுகின்றனர்.

இதனால் தமது மீன்பிடிப் படகுகள் அனைத்தையும் நீண்ட நாள்களாய் கரையோரத்தில் மீனவர்கள் நிறுத்திவைத்துள்ளதுடன் பெரிய படகுகளை கடலின் நடுவே நங்கூரமிட்டு நிறுத்தியுள்ளனர்.

வாரத்தில் ஓரிருநாள்கள் வழங்கப்படும் எரிபொருள் தேவைக்கு போதாதுள்ளதாகவும் கொள்கலன்களில் எரிபொருள் தர எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் மறுப்புத் தெரிவிப்பதாலும் தொடர்ந்தும் கடற்றொழில் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 25 ஆயிரம் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

– ரீ.எல்.ஜவ்பர்கான்



விஜயவாடா

# தங்கைக்காக மாட்டு வண்டியில் புதுடெல்லி புறப்பட்ட அண்ணன்

தங்கைக்கு புகுந்த வீட்டில் பிரச்சினை ஏற்பட்டதாலும், மாப்பிள்ளை வீட்டாருக்கு ஆந்திராவில் ஆளும் கட்சியினரின் ஆதரவு இருப்பதாலும், தக்க நீதி கிடைக்காதென முடிவு செய்து, தாய் மற்றும் தங்கையுடன் அவரது அண்ணன் புதுடெல்லி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர மாட்டு வண்டியில் புறப்பட்டு சென்றுள்ளார்.



மே.25 ஆம் திகதி சகோதரர் தினமாகும். அன்றையதினம் பல சகோதர, சகோதரிகள் தங்களது அன்பை நேரிலும், சமூக வலைத்தளங்களிலும் பரிமாறிக் கொண்டனர்.

ஆனால், உடன்பிறந்த அண்ணன், தனது தங்கைக்கு மாமியார் வீட்டில் நடந்த கொடுமைக்காக நீதி கேட்டு, புதுடெல்லி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்காக, தனது தங்கை மற்றும் தாயாருடன் மாட்டு வண்டியில் சகோதரர் தினத்தன்றே புறப்பட்டு சென்று கொண்டிருக்கிறார்.




திருச்சி, திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர்–அகிலாண்டேஸ்வரி கோவிலுக்கு ‘அகிலா’ என்றழைக்கப்படும் யானை வழங்கப்பட்டது. இந்த யானை, அசாம் மாநிலத்தில் 24.5.2002 இல் பிறந்தது. யானை வழிபட்டு முக்தி அடைந்த கோவிலாக திருவானைக்காவல் இருப்பதால், இங்கு யானைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் சிவபூஜைக்காக யானை ‘அகிலா’ திருமஞ்சனம் எடுத்து வருகிறது.



அமலாபுரம்

## அம்பேத்கர் பெயரை சூட்ட கடும் எதிர்ப்பு

ஆந்திராவில் கோனசீமா மாவட்டத்துக்கு அம்பேத்கர் பெயர் சூட்ட எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைச்சர், எம்.எல்.ஏக்களின் வீடுகளுக்கு தீ வைத்துள்ளனர்.

ஆந்திராவில் 13 மாவட்டங்கள் இருந்த நிலையில், கடந்த 2 மாதங்களுக்கு முன்பு மக்களவை தொகுதிகளின் அடிப்படையில் 26 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக கோனசீமா என்ற பெயரில் புதிய மாவட்டம் உருவானது. இதற்கு அமலாபுரம் மாவட்ட தலைநகராக அறிவிக்கப்பட்டது.

2 மாதங்கள் கழித்து இந்த மாவட்டத்துக்கு டொக்டர் பி.ஆர். அம்பேத்கர் கோனசீமா மாவட்டம் என பெயர் சூட்ட அரசு பரிசீலனை செய்வதாக அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக மக்கள் தங்களது கருத்தை தெரிவிக்க கால அவகாசம் வழங்கப்பட்டது.

இதனால், மிகவும் அமைதியான மாவட்டம் எனப் பெயர் எடுத்திருந்த அமலாபுரத்தில் திடீரென புரட்சி வெடித்தது. அம்பேத்கர் பெயர் சூட்ட அப்பகுதியினரும் எதிர்க்கட்சியினரும் ஆட்சேபம் தெரிவித்தனர். மெல்ல, மெல்ல இது அரசியல் சாயம் பூசப்பட்டு போராட்டமாக உருவெடுத்தது.

திடீரென இந்தக் கண்டன ஊர்வலம், போராட்டக் களமாக மாறியது. அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் கலவரமாக வெடித்தது. எனினும், அங்கு கடுமையான பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ஸ்ரீநகர்

## தொலைக்காட்சி கலைஞர் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை

காஷ்மீரில் தொலைக்காட்சி கலைஞர் அம்ரீன் பட்டினின் வீட்டுக்குள் அதிரடியாக நுழைந்த தீவிரவாதிகள் அவரைச் சுட்டு கொன்றனர்.

அந்த சமயத்தில் அவருடன், வீட்டிலிருந்த 10 வயது சிறுவனும் பாதிக்கப்பட்டான். இருவரும் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும், அம்ரீன் பட்டின் ஏற்கெனவே இறந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள், கடந்த சில வாரங்களாக, காஷ்மீரில் முக்கிய நபர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவர்களே



இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

அம்ரீன் பட், காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் பிரபலமான ஒரு நபராக அறியப்படுகிறார். டிக் டாக் மூலம் பிரபலமான அவர், அங்குள்ள உள்ளூர் தொலைக்காட்சி சேவையிலும் பணியாற்றி வந்துள்ளார். சில முக்கிய நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியும் உள்ளார்.

நீலகிரி

## பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்காமையால் அவதி

நீலகிரி மாவட்டதில் பசுந்தேயிலை மற்றும் தேயிலை தூள் விற்பனை அதிகரித்தபோதிலும் உரிய விலை கிடைக்காதது விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. நீலகிரி குன்னுரில் உற்பத்தியாகும் தேயிலைக்கு நல்ல வரவேற்பு உள்ளதால் உள்ளூர் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிலையில், பசுந்தேயிலை உற்பத்தி அதிகரித்தபோதும் அதன் விலை வீழ்ச்சி அடைந்திருப்பது விவசாயிகளை கவலை அடையச் செய்துள்ளது. எனவே பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்க அரசு



குறைந்த பட்சம் ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பசுந்தேயிலை கிலோ கிராமுக்கு 10 இந்திய ரூபாய்க்கும் குறைவாக கிடைக்கிறது. எனவே, குறைந்த பட்சம் ஆதார விலையை நிர்ணயம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் போரட்டத்தில் ஈடுபடப்போவதாக தெரிவித்துள்ளனர்.

செங்கல்பட்டு

## 2ஆவது திருமணம் செய்தவருக்கு சிறை

முதல் மனைவியை ஏமாற்றி 2ஆவது திருமணம் செய்தவருக்கு ஓராண்டு சிறைத்தண்டனை வழங்கி செங்கல்பட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது

நெம்மேலி துஞ்சம் கிராமத்தை சேர்ந்த 38 வயதானவருக்கு, 8 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றுள்ளது.

இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. இந்நிலையில், கருத்து வேறுபாடு காரணமாக இவ்விருவரும் பிரிந்து வாழ்ந்து வந்துள்ளனர். இதனிடையே 2 ஆவதாக திருமணம் செய்து கொண்டார். இதுபற்றி அறிந்த முதல்மனைவி, பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்பின்னர் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குற்றச்சாட்டு உறுதியானதால் அவருக்கு ஓராண்டு கடுங்காவல் சிறைத்தண்டனையும் ரூ.10 ஆயிரம் அபராதமும், அபராத தொகை செலுத்த தவறினால் மேலும் 3 மாதங்கள் சிறைத்தணடனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

# நான்கு தங்க விருதுகளை சுவீகரித்தது லங்கா SSL



E.B. Creasy அன்ட் கம்பனி பிஎல்சியின் முழு உரிமையாண்மையின் கீழ் இயங்கும் லங்கா ஸ்பெஷல் ஸ்டீல் லிமிடெட் (லங்கா SSL), தனது அவன்தியா, டார்கெட், சக்தி மற்றும் வேர்ஜ் ஆகிய அணிகளினூடாக தனது வெற்றிப் பயணத்தை தொடர்ந்து, தரம் மற்றும் உற்பத்தித் திறன் தேசிய மாநாடு (NCQP) 2021 இல் நான்கு விருதுகளை வென்றிருந்தது.

தரம் மற்றும் உற்பத்தித்திறன் முன்னேற்றத்துக்கான இலங்கை சம்மேளனத்தினால் (SLAAQP) வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்வு, இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகியின் பங்கேற்புடன் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இதர அதிதிகளாக கலாநிதி. சுனில் ஜயந்த நவரட்ன, சுனில் ஜி விஜேசிங்க மற்றும் SLAAQP இன் தலைவர் விபுல் குலரட்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் 250 க்கும் அதிகமான அணிகள் இந்நிகழ்வில் பங்கேற்று வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பில் முன்னெடுக்கக்கூடிய பல்வேறு செயற்பாடுகளை வெளிப்படுத்தி போட்டியிட்டிருந்தன. லங்கா SSL இன் நான்கு அணிகளினால் சிறந்த வலிமைகள் மற்றும் பெறுமதிகள் போன்றன இந்தப் பிரிவுகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவர்களின் நம்பிக்கை, கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு போன்றவற்றுக்கு உயர் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

லங்கா SSL சார்பாக போட்டியிட்டவர்களில் மதுசங்க, சாமர, கோசல மற்றும் தினேஷ் (அவன்தியா அணி), நிப்ரான், சுசந்த மற்றும் ஒஷான் (டார்கெட் அணி), அமித், பிரேமரட்ன மற்றும் ஜி. ரி. மதுசங்க (சக்தி அணி) மற்றும் சாகர, சுப்புன், கிஹானி, அசங்க, கசுனி மற்றும் சச்சினி (வேகர் அணி) ஆகியோர் அடங்கியிருந்தனர்.

“கடந்த 10 வருடங்களுக்கு மேலாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்பாடு செய்யப்படும் மாநாடுகளில் பங்கேற்பதில் சிறந்த பதிவுகளை லங்கா ஸ்பெஷல் ஸ்டீல்ஸ் கொண்டுள்ளது. எமது பெறுமதி வாய்ந்த ஊழியர்கள் காண்பித்திருந்த அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாடு தொடர்பில் நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். குறிப்பாக விற்பனைப் பகுதிகளின் கள நிலைகளிலிருந்து, ஆற்றும் பங்களிப்புகள் தமது உயரதிகாரிகளுடன் ஒன்றிணைந்து பங்காற்றுவதனூடாக உற்பத்தித் திறன் அதிகரிப்புக்கு ஏதுவாக அமைந்திருந்தன.

இந்த மாநாட்டில் நான்கு விருதுகளை வெற்றியீட்டியுள்ளமை என்பது உண்மையில் பாராட்டப்பட வேண்டும் என்பதுடன், நாம் பெருமையும் கொள்ள வேண்டிய விடயமாக அமைந்துள்ளது. கடந்த ஆண்டில் இடம்பெற்ற நிகழ்வில் ஒரு தங்க விருதை மாத்திரம் வெற்றியீட்டியிருந்த நிலையில், இந்த ஆண்டில் நாம் எய்திய சாதனைகள் மிகவும் பாரிய விடயமாக அமைந்துள்ளது” என பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான பிரவீன் டி சில்வா தெரிவித்தார்.

இலங்கையில் SLS சான்றிதழைப் பெற்ற ஒரே hot-dipped galvanized (Gi) கம்பிகள் மற்றும் barbed கம்பிகள் உற்பத்தியாளரான லங்கா SSL, அதன் தரம், புத்தாக்கம் மற்றும் சிறப்புக்காக தொடர்ச்சியாக கௌரவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் முற்பகுதியில், தேசிய வியாபார சிறப்புகள் 2021 இல் பாரிய பிரிவில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டதுடன், உற்பத்தி - ஏனைய பிரிவில் வெற்றியாளராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டில், மிகப் பெரிய பிரிவு தேசிய தங்க விருதை (உற்பத்தித் துறை) பெற்றுக் கொண்டதுடன், தொழிற்துறை சிறப்புக்கான CNCI சாதனையாளர் விருதுகள் 2020 இல் சிறந்த பத்து விருதை சுவீகரித்திருந்தது.

கோழி இறைச்சி விநியோகத்தை

# New Anthoney's Farms மீளஉறுதி செய்துள்ளது

நுகர்வோர் தொடர்ச்சியாக கோழி இறைச்சி தயாரிப்புகளை நுகர்வதை உறுதி செய்யும் வகையில், New Anthoney's Farms (பிரைவட்) லிமிடெட், போதியளவு மற்றும் தடங்கலில்லாத கோழி இறைச்சி விநியோகத்தை மேற்கொள்வதை உறுதி செய்துள்ளது. இலங்கையின் பொருளாதாரம் பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், கோழிகளுக்கு அவசியமான தீன்களைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் தட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் தமது இறைச்சித் தெரிவுகளை தொடர்ந்தும் விநியோகிப்பதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

போதியளவு டொலர் கையிருப்பிலில்லாமை காரணமாக தீனிக்களுக்கு அவசியமான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதில் காணப்படும் நெருக்கடி நிலை மற்றும் அவற்றின் விலைகள் சர்வதேச சந்தையில் பெருமளவில் அதிகரித்துச் செல்கின்றமையினால், தரமான, சிறந்த மற்றும் போஷாக்கான தீன்களைப் பெற்றுக் கொள்வது கோழி இறைச்சித் துறைக்கு சவால்கள் நிறைந்த விடயமாக அமைந்துள்ளது. இதனால் நடப்பு ஆண்டில் கோழி இறைச்சி உற்பத்தி ஐந்தில் ஒரு பங்காக வீழ்ச்சியடையலாம் என அனுமானித்துள்ளது.

NewAnthoney's Farms இன் தவிசாளரும் இணை ஸ்தாபகருமான எமில் ஸ்டான்லி கருத்துத் தெரிவிக்கையில், “தற்போதைய சூழ்நிலை தொடர்பில் நாம் கூர்மையாக அவதானித்து வருவதுடன், எழும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய முன்னாயத்தமான நடவடிக்கைகளை உரிய காலத்தில் மேற்கொள்வதற்காக பிரதான பங்காளர்களுடன் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். கோழி இறைச்சித் துறையை மீண்டும் உரிய நிலைக்கு கொண்டு வருவதற்கும் அதன் சூழல் கட்டமைப்பு மற்றும் பெறுமதி சங்கிலியை வலுவூட்டுவதற்கும் கைகோர்த்து செயலாற்றுவதற்கு இது உகந்த காலமாக அமைந்துள்ளது.





NewAnthoney's Farms இன் Haritha Hari என்பது, முற்றிலும் இயற்கையான செயன்முறையாக அமைந்திருப்பதுடன், போஷாக்கு நிறைந்த மற்றும் எந்தவோர் அன்ரிபயோடிக் அல்லது ஹோர்மோன் திரிபு அற்ற முறையில் பேணப்பட்டு, முற்றிலும் இயற்கையான தீனிக்களை வழங்கி தயாரிக்கப்படுகின்றது. அதிகளவு இடவசதி மற்றும் அழுத்தமில்லாத சூழலில், ஆரோக்கியமான கோழி வளர்ப்பில் ஈடுபடுவது என்பது New Anthoney's Farms க்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. விலங்கு நலன், பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்கள் போன்றன தொடர்பான பொறுப்புகள் உற்பத்தியாளரின் கலாசாரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அம்சங்களாக காணப்படுவதுடன், அமெரிக்காவின் தேசிய கோழி இறைச்சி சம்மேளனத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டதாக அமைந்துள்ளது.

கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் நிலவிய கொவிட் தொற்றுப் பரவலுடனான நெருக்கடியான சூழலில், New Anthoney's Farms இனால் சர்வதேச ரீதியில் தனது பிரசன்னத்தை நிறுவும் வகையிலான முக்கியமான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. Anthoney's மற்றும் NoBiotic கோழி இறைச்சி வர்த்தக நாமங்களுக்கு பிரதான சர்வதேச சந்தைகளிலிருந்து கிடைக்கும் ஓடர்களினூடாக, 2021/22 ஆண்டில் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானத்தை பெற்றுக் கொள்ள முடிந்தது. இதனால், நாட்டுக்கு தேவைப்படும் மிகவும் அவசியமான அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொடுக்கவும் முடிந்துள்ளது” என்றார்.

பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர கருத்துத் தெரிவிக்கையில், “அண்மை வருடக் காலப்பகுதியில் எமது நவீன உற்பத்தி வசதிகளை விரிவாக்கம் செய்துள்ளதுடன், அதனூடாக அதிகரித்துச் செல்லும் உள்நாட்டு மற்றும் சர்வதேச கேள்விகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் செயலாற்றுகின்றோம். உலகத் தரம் வாய்ந்த சூழலுக்கு நட்பான நியமங்கள் மற்றும் நிலைபேறான செயற்பாடுகளை பின்பற்றுவதனூடாக முன்னணி இறைச்சி ஏற்றுமதியாளராக திகழ்வதற்கான ஏற்றுமதி தந்திரோபாயத்தை நாம் பின்பற்றிய வண்ணமுள்ளோம்” என்றார்.

உலகளாவிய ரீதியில் பரந்தளவு நுகரப்படும் இறைச்சி வகையாக கோழி இறைச்சி அமைந்துள்ளதுடன், இலங்கையிலும் இல்லங்களில் தினசரி நுகரப்படும் இறைச்சி வகையாக அமைந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. அதில் முக்கிய அங்கம் வகிப்பதையிட்டு New Anthoney's Farms பெருமை கொள்கின்றது. நிறுவனத்துக்கு உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் GMP, HACCP, ISO 22000 சான்றுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஹலால் சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.

உக்ரேன்

# போர்க் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

நேட்டோ அமைப்புடன் உக்ரேன் இணையவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, உக்ரேன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து கடுமையாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.
இதன் காரணமாக உக்ரேனில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதுடன், இலட்சக்கணக்கானோர் அகதிகளாக அயல் நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

இந்நிலையில், ரஷ்யா - உக்ரேன் இடையேயான போரின், முதலாவது போர்க்குற்ற விசாரணையின் தீர்ப்பு நேற்று முன்தினம் (25) அந்நாட்டின் தலைநகரான கீவ்வில் வழங்கப்பட்டது.

இவ்வழக்கு விசாரணையின் போது, 21 வயதுடைய ரஷ்ய இராணுவ வீரர், உக்ரேன்



மீதான ரஷ்ய படையெடுப்பின் ஆரம்ப கட்டத்தில், நிராயுதபாணியான உக்ரேன் நாட்டை சேர்ந்த 62 வயது மூதாட்டியை கொன்றதற்காக கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டமையாலும், தன் மீதான அழுத்தத்தின் காரணமாக அவ்வாறு செய்து விட்டதாகவும் அனைத்து தண்டனை நடவடிக்கைகளையும் ஏற்றுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் “நான் உண்மையாக வருந்துகிறேன். அந்தச் சம்பவத்தை நடத்த நான் விரும்பவில்லை. ஆனால் அது நடந்தது. மீண்டும் ஒருமுறை மன்னிப்பு கேட்க விரும்புகிறேன்” என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனையடுத்து, போர் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்க வேண்டும் எனக் கேட்ட வழக்கறிஞர்கள், இது ஒரு குற்றவியல் குற்றம் என்பதை நன்கு அறிந்துகொண்டே இந்தச் செயலை செய்தார் எனத் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, போர்க் குற்றங்களுக்கான முதல் குற்றவாளியாக கைது செய்யப்பட்ட ரஷ்ய வீரர் வாடிம் ஷிஷிமரின்க்கு ஆயுள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஆப்கானிஸ்தான்

4 இடங்களில் அடுத்தடுத்து குண்டு வெடிப்புகள்;

## 16 பேர் உயிரிழப்பு


ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் உள்ளிட்ட 4 இடங்களில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்புத் தாக்குதல்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலானது ஷியா பிரிவினரை குறி வைத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. எனினும் இதற்கு எந்த அமைப்பும் இது வரை பொறுப்பேற்கவில்லை என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

செனகல்

வைத்திய சாலையில் தீ

## 11 சிசுக்கள் கருகின



செனகல் நாட்டில் உள்ள வைத்தியசாலையொன்றில், குழந்தைகளுக்கான வார்ட்டில் எதிர் பாராத விதமாக இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி 11 சிசுக்கள் உயிரிழந்தனர்.

இதுகுறித்து தகவலறிந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர். இவ்விபத்துக்கான காரணம் குறித்து தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. இந்நிலையில் இச் சம்பவத்திற்கு அந்நாட்டு ஜனாதிபதி மெக்கி சால்வருத்தம் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு இதனைப் போலவே குழந்தைகளுக்கான பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு குழந்தைகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல்

## இஸ்ரேல்- பாலஸ்தீன மோதலில் சிறுவன் உயிரிழப்பு; 80 பேர் காயம்



இஸ்ரேல் பாதுகாப்புப் படையினருக்கும் பாலஸ்தீனர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் (25) நடந்த மோதலில் 16 வயதுச் சிறுவன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளான்.

மேற்குகரையின் நப்லுஸ் நகரில் உள்ள யூத மத வழிப்பாட்டு தலத்திற்கு பாதுகாப்பு படையினரோடு சென்ற இஸ்ரேலியர்கள் மீது கற்கள் மற்றும் பெட்ரோல் குண்டுகளை வீசி நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் தாக்குதல் நடத்திய போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதன் போது இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் கண்ணீர் புகைக் குண்டுகள் வீசியும் துப்பாக்கிச்சூடு நடத்தியும், போராட்டக்காரர்களைக் கலைத்தனர் எனவும் இத் தாக்குதல்களில் 80 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியா

## கழிவறையில் ‘கேம்’யை இடையில் நிறுத்திய உஷ்




கழிவறையில் அமர்ந்தவாறு திறன்பேசியைப் பயன்படுத்திய இளைஞருக்கு நேர்ந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மலேசியாவைச் சேர்ந்தவர் சப்ரி தசாலி. 28 வயதான இவர் தினமும் கழிவறையைப் பயன்படுத்தும்போது தனது திறன்பேசியில் வீடியோ கேம் விளையாடுவதை வழக்கமாக வைத்துள்ளார்.

இந்நிலையில், அண்மையில் சப்ரி தசாலி கழிவறையில் அமர்ந்தவாறு வீடியோ கேம் விளையாடிக் கொண்டிருந்த போது மலைப்பாம்பு ஒன்று சப்ரி தசாலியின் பின் புறம் தீண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை சற்றும் எதிர் பாராத அவர் பாம்பை பிடித்துக்கொண்டே அலறியடித்துக் கொண்டு கழிவறையை விட்டு வெளியே ஓடியுள்ளார் எனவும் அதன் பின்னர் அப்பாம்பைப் பிடித்து வீசியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஆப்கானிஸ்தான்

பெண் தொகுப்பாளர்களுக்கு ஆதரவாக

## ஆண் தொகுப்பாளர்கள் களமிறங்கினர்

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.
அந்தவகையில் அண்மையில் தொலைக்காட்சிகளில் பணிபுரியும் பெண் தொகுப்பாளர்கள் கட்டாயம் முகத்தை மூடியிருக்க வேண்டுமென்ற அதிரடி உத்தரவொன்றையும் பிறப்பித்திருந்தனர்.

இதற்கு உலக நாடுகளிடையே கடும் கண்டனங்கள் எழுந்த நிலையிலும், பெண்கள் முகத்தை மூடிக் கொண்டுடே செய்தி வாசிக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இந்நிலையில்,





தலிபான்களின் உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், பெண்களுக்கு தங்களது ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் ஆண் தொகுப்பாளர்கள் முகமூடி அணிந்து பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஐ.பி.எல்:

# தகுதிகாண் போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்



இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) இரண்டாவது தகுதிகாண் போட்டிக்கு றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் தகுதி பெற்றுள்ளது.

கொல்கத்தாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான வெளியேற்றப் போட்டியில் வென்றே இரண்டாவது தகுதிகாண் போட்டிக்கு பெங்களூர் தகுதி பெற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சுப்பர் ஜையன்ட்ஸின் அணித்தலைவர் லோகேஷ் ராகுல், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர், ரஜாட் பட்டிடாரின் ஆட்டமிழக்காத 112 (54), தினேஷ் கார்த்திக்கின் ஆட்டமிழக்காத 37 (23) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மொஹ்சின் கான் 4-0-25-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 208 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய லோகேஷ் ராகுல் 79 (58), தீபக் ஹூடா 45 (26) ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களையே பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், ஹர்ஷால் பட்டேல் 4-0-25-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக ரஜாட் பட்டிடார் தெரிவானார்.

இந்நிலையில், அஹமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது தகுதிகாண் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை பெங்களூர் எதிர்கொள்ளவுள்ளது.

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

## முன்னிலையில் இலங்கை




பங்களாதேஷுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், மிர்பூரில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த இரண்டாவது டெஸ்டின் நேற்றைய நான்காம் நாள் ஆட்ட முடிவில் இலங்கை முன்னிலையில் காணப்படுகிறது.

நாளை தமது முதலாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இலங்கை, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் மூலம் தொடர்ச்சியாக ஓட்டங்களைக் குவித்த நிலையில் 124 ஓட்டங்களுடன் சந்திமால் எபொடொட் ஹொஸைனிடம் வீழ்ந்ததுடன், அடுத்து வந்தோர் வரிசையாக ஷகிப் அல் ஹஸன் (2), எபொடொட் ஹொஸைனிடம் வீழ்ந்த நிலையில் சகல விக்கெட்டு-களையும் இழந்து 506 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஷகிப் அல் ஹஸன் 5, எபொடொட் ஹொஸைன் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்குத் தமது 2வது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், அசித பெர்ணா-ண்டோ (2), கசின் ராஜிதவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நேற்றைய நான்காம் நாள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், முஷ்பிக்கூர் ரஹீம் 14 ஓட்டங்களுடனும், லிட்டன் தாஸ் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 365/10 (துடுப்பாட்டம்: முஷ்பிக்கூர் ரஹீம் ஆ.இ 175, லிட்டன் தாஸ் 141 ஓட்டங்கள். பந்துவீச்சு: கசுன் ராஜித 5/64, அசித பெர்ணாண்டோ 4/93)

இலங்கை: 506/10(துடுப்பாட்டம்: அஞ்சலோ மத்தியூஸ் ஆ.இ 145, தினேஷ் சந்திமால் 124, திமுத் கருணாரத்ன 80, தனஞ்சய டி சில்வா 58, ஒஷாட பெர்ணாண்டோ 57 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகிப் அல் ஹஸன் 5/96, எபொடொட் ஹொஸைன் 4/148)

பங்களாதேஷ்: 34/4 (பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 2/12, கசுன் ராஜித 1/12)



அம்பாறை விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பி பிரிவு தொடர்:

## மருதமுனை ஈஸ்ட் லங்காவை வென்ற காரைதீவு விவேகானந்தா

அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் நடாத்தும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பி பிரிவு கால்பந்தாட்டத் தொடரில், காரைதீவு கனகரெட்ணம் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற மருதமுனை ஈஸ்ட் லங்காவுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகம் வென்றது.

இத்தொடரில், அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள விளையாட்டு மைதானங்களில் இடம்பெற்று வருவதாக அம்பாறை மாவட்ட கால்பந்தாட்டச் சங்க செயலாளர் எம்.ஐ. அப்துல் மனாப் தெரிவித்தார்.

## அடுத்த பருவகாலத்திலும் லிவர்பூலில் சாலா



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலிலேயே அடுத்த பருவகாலத்திலும் தொடருவேன் என அக்கழகத்தின் முன்களவீரரான மொஹமட் சாலா தெரிவித்துள்ளார்.


இந்நிலையில், லிவர்பூலுடனான 30 வயதான சாலாவின் ஒப்பந்தமானது அடுத்தாண்டு ஜூன் மாதத்துடன் முடிவுறுகையில், புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது குறித்து சாலா வெளிப்படுத்தியிருக்கவில்லை.

அந்தவகையில், புதிய ஒப்பந்தத்தில் சாலா கைச்சாத்திடாவிட்டால் விற்கப்படுவார் என்ற கருத்து காணப்படுகின்றது.

## எட்டு மாதங்களுக்கு இப்ராஹிமோவிச் இல்லை

முழங்கால் சத்திரசிகிச்சையை மேற்கொண்டமையையடுத்து எட்டு மாதங்களுக்கு இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனின் முன்களவீரரான ஸல்டான் இப்ராஹிமோவிச் விளையாட முடியாமல் இருக்கப் போகின்றது.

40 வயதான இப்ராஹிமோவிச்சுடனான ஏ.சி மிலனின் ஒப்பந்தமானது நடப்பு பருவகாலத்தில் முடிவடைகின்ற நிலையில்,




குறைந்தது மேலுமொரு பருவகாலத்துக்காவது ஏ.சி மிலனில் தொடரும் விருப்பத்தை முன்னர் இப்ராஹிமோவிச் வெளியிட்டிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வெள்ளிக்கிழமை, 27 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.